Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

விரைவாகவும், துல்லியமாகவும்
உங்கள் இல்லங்களிலிருந்து
உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTERNET
மூலம் தொடர்பு கொள்ள
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால் / பொதிகள் சேவை
Sri Murugan
Tele Communication & Agency Post Office
303.K.K.S ROAD, JAFFNA T.P- 021-222 2670.
FAX-222 3214. email-del-smskr@eureka.lk

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆனி 29 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 13 (14.07.2003) திங்கட்கிழமை இதழ்: 285

## மாகாண தடகளப் போட்டியில் திருமலை மாவட்டம் முதலிடம்!

### யாழ். மாவட்டத்துக்கு இரண்டாவது இடம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற, வடக்கு - கிழக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டி களில், அதிகூடிய புள்ளிகளைப் பெறறு, திருகோண மலை மாவட்டம் முதலாம் இடத்தைத் தட்டிச்சென்றது.

நேற்றுமுன்தினமும், நேற்றும் இடம்பெற்ற தடகள விளையாட்டுப் போட்டிகளில் - மொத்தமாக 126 புள்ளி களைப் பெற்று, திருகோணமலை மாவட்டம் முதலாம் இடத்தையும், 102 புள்ளிகளைப் பெற்று யாழ்ப்பாண மாவட்டம் இரண்டாம் இடத்தையும், 71 புள்ளிகளைப் பெற்று அம்பாறை மாவட்டம் மூன்றாம் இடத்தையும் சுவீகரித்துக் கொண்டன.

இதேவேளை, சுவட்டு நிகழ்ச்சிகளில், யாழ்ப்பாண மாவட்டம் 113 புள்ளிகளை பெற்று முதலாம் இடத் தைத் தட்டிச்சென்றது குறிப்பிடத்தக்கது.

திருகோணமலை மாவட்டம் 94 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், அம்பாறை மாவட்டம் 66 புள்ளிகளைப் பெற்று மூன்றாம் (10 ஆம் பக்கம் பார்க்க)



வடக்கு - கிழக்கு மாகாண மட்டத் தடகளப் போட்டியில் முதலாம் இடத்தைப் பெற்ற திருகோணமலை அணிக்கு யாழ்.அரச அதிபர் செ.பத்மநாதன் வெற்றிக்கிண்ணத்தை வழங்குகின்றார். (படம்:லிவிங்ஸ்டன்)

# கரும்புலித் தாக்குதல் பற்றி அறிந்துகொள்ள அமெரிக்கப் புலனாய்வு அதிகாரி கொழும்பில்!

## புலனாய்வுச்சேவைத் தலைவர்களுடன் இரகசிய சந்திப்பிலும் அவர் பங்கேற்றார்

(கொழும்பு)

**அரசாங்கப் புலனாய்வுச் சேவைகளின் தலைவர்கள் கலந்துகொண்ட முக்கிய மாநாடு ஒன்றில், அமெரிக்காவைச் சேர்ந்த உயரதிகாரியொருவர் கலந்துகொண்டதாகவும், இவர் - அந்த மாநாட்டில் விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணி குறித்தும், புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய இராணுவ மையங்கள் பற்றியும் அறிந்துகொள்வதில் கூடிய கவனம் செலுத்தியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.**

இவர், இந்த உயர்மட்ட மாநாட் டில் கலந்துகொண்டது குறித்து பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களே அறிந்து கொள்ளவில்லை எனவும் தெரியவருகிறது.

இதுகுறித்து மேலும் தெரியவரு வதாவது, ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபரும், பாதுகாப்பு அமைச் சின் ஆலோசகரும், தற்போதைய அர சாங்கத்தின் புலனாய்வுச் சேவைகள் சம்பந்தமான பணிகளை முன்னெடுப் பதற்காக நியமிக்கப்பட்டிருப்பவரு மான - மெரில் குணரட்ண தலை மையில் நடந்த, புலனாய்வுச் சேவை களின் தலைவர்களுக்கான மாநாட் டிலேயே, குறிப்பிட்ட அமெரிக்க உயரதிகாரியும் கலந்துகொண் டிருந்ததாகத் தெரியவந்திருக்கிறது.

கடந்த வாரம் நடைபெற்ற இந்த மாநாட்டில், முதற்தடவையாக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## விடுமுறை வழங்கப்படாததால் கடற்படைச் சிப்பாய் தற்கொலை!

### காரைநகர் தளத்தில் நேற்றிரவு சம்பவம்

காரைநகரில், கடற்படைச் சிப்பாய் ஒருவர், கைக்குண்டை வெடிக்க வைத்துத் தற்கொலை செய்துகொண்டார்.

காரைநகர் கடற்படைத் தளத்தில், நேற்றிரவு இடம்பெற்ற இச்சம் பவத்தில், டபிள்யு.எம்.அகிலகுமார (வயது - 25) என்ற கடற்படைச் சிப்பாயே இவ்வாறு தற்கொலை செய்துகொண்டவராவார்.

இந்தக் கடற்படைச் சிப்பாயின் சடலம், நேற்றிரவு யாழ். போதனா மருத்துவமனையில் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

மேற்படி கடற்படைச் சிப்பாய், விடுமுறை கோரியதாகவும், உயரதிகா ரிகள் மறுப்புத் தெரிவித்ததாலேயே, இவர் கைக்குண்டை வெடிக்கவைத்து, தற்கொலை செய்துகொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## காணாமற்போனோர் விசாரணை; அறிக்கை விரைவில் கையளிப்பு!

### ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் காணாமற் போனோர் தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணைகள் தொடர்பான அறிக் கையை, மனித உரிமை ஆணைக் குழுவிடம் கையளிக்கவுள்ளதாக, காணாமற்போனோர் தொடர்பாக விசா ரணையை மேற்கொள்ள நியமிக்கப் பட்ட ஆணைக்குழுவின் தலைவர் தேவநேசன் நேசையா தெரிவித்துள் ளார்.

நேற்று, யாழ். மனித உரிமை ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர்களு டனான சந்திப்பிலேயே அவர் இத்தகவலை வெளியிட்டார். இந்தச் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது,

1996, 1997 ஆம் ஆண்டு காலப் பகுதியில், காணாமற்போன 330 பேர் தொடர்பாக, இதுவரை ஆறு கட்ட விசாரணைகள் பூர்த்தியடைந்துள் ளன. ஆனால், காணாமற்போனவர் களின் உறவினர்கள் சிலர், இந்த விசாரணைக்குச் சமுகமளிக்காததால, பூரண தகவல்களைப் பெற முடிய வில்லை.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலிய பாதுகாப்பு நிபுணர்கள் கொழும்பிற்குத் திரண்டு வந்தனர்!

### சிங்கப்பூர் ஆயுத வர்த்தகரும் உடன் வருகை!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன, இஸ்ரேலுக்கு விஜயம் செய்வதற்கு, இரண்டு வாரங்க ளுக்கு முன்னர், உயர்மட்ட இஸ் ரேலியப் பாதுகாப்பு நிபுணர்கள் குழு வொன்று கொழும்புக்கு வந்திருப்ப தாகத் தெரியவருகிறது.

இஸ்ரேலிய இராணுவப் புல னாய்வுப் பிரிவின் முன்னாள் உயர் அதிகாரியும், இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் சர்வதேச விவகாரப் பிரிவின் தலைவராக உள்ளவருமான குற்றி மோர் (Kuti more) தலைமையி லேயே, இந்தப் பாதுகாப்பு நிபுணர் கள் கொழும்புக்கு வந்திருந்தனர்.

இவர்களது கொழும்பு விஜயத் துக்கான ஏற்பாடுகளை, சிங்கப்பூரை மையமாகக் கொண்டு செயற்படும் பிரபல ஆயுத வர்த்தக முகவரான

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 21 அகதிகள் தாயகம் திரும்பினர்

(யாழ்ப்பாணம்)

இந்தியாவிலிருந்து இருபத்தி யொரு தமிழ்அகதிகள், நேற்று அதி காலை நெடுந்தீவுக்குத் திரும்பினர். நாடு திரும்பிய அகதிகளில் பெரும் பாலானோர், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் நெடுந்தீவு பிரதேச செய லகத்தில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

## வட-கிழக்கு மக்களின் தேவைகளை நிறைவேற்றும் அதிகாரங்கள் இடைக்கால நிர்வாகத்துக்கு அவசியம்!

### யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் வலியுறுத்து

"தமிழ்மக்கள், தமது தேவை களைப் பூரணமாக நிறைவேற்றிக் கொள்ளும் வகையில், வட - கிழக் குக்கான இடைக்கால நிர்வாக சபை யின் அதிகாரங்கள் அமைந்திருக்க வேண்டும். அப்போதுதான் சமாதா னப் பேச்சுவார்த்தையில் மக்கள் நம்பிக்கை வைப்பார்கள்."

- இவ்வாறு யாழ். ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தெரிவித்தார். நேற்று கொழும்புச் செய்தியாளர் ஒருவரிடம் பேசியபோதே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அரசாங்கம் இந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டும். புரிந்துணர்வின் அடிப்படையில் இரு தரப்பும் பேச்சுவார்த்தையை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும், மனம் திறந்து பேசவும் வேண்டும். தற்போது கிடைத் திருக்கின்ற சர்வதேச சமூகத்தின் உதவிகளை நன்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கக் கூட்டமும் நினைவுக்கல் நாட்டலும்

சர்வதேசக் கடற்பரப்பில், விடுத லைப் புலிகளின் வணிகக் கப்பல் மீது 14.06.2003 அன்று மேற்கொள் ளப்பட்ட தாக்குதலில் வீரச்சாவடைந்த மீசாலை தெற்கு - சாவகச்சேரியைச் சேர்ந்த லெப். கேணல் கதிர் (செல்வ ரத்தினம் சசிந்திரன்) என்ற மாவீரரது திருவுருவப் படம், அவரது இல்லத் திலிருந்து இன்று நண்பகல் 12

(10 ஆம் பக்கம் பார்க்க)




ரி.ரி.என். தொலைக்காட்சியின் 'குட்டி மேதைகள்' சிறுவர் நிகழ்ச் சித் தொடருக்கான ஒளிப்பதிவு நிகழ்வு, நேற்று வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.
(படம்:லிவிங்ஸ்டன்)

# நெடுந்தீவில் கடும் வரட்சி; குடிநீரும் உவர்ப்பாகிறது!

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் கடும் வரட்சி காரணமாக, நீர்நிலைகள் வற்றி அவற்றிலிருந்து துர்நாற்றம் வீசிவருகின்றது.

குளங்கள் மற்றும் கால்நடைகளுக்கென அமைக்கப்பட்டுள்ள பொதுக்கேணிகள் என்பவை நீர்வற்றிக் காணப்படுவதனால், கால்நடைகளும் நீரின்றி இறக்கவேண்டிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

பொதுமக்கள் நடமாட்டமுள்ள வீதிகளுக்கு அருகிலுள்ள குளம், கேணிகள் என்பனவற்றில் துர்நாற்றம் வீசுவதனால், மக்கள் பலத்த அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

குழாய் மூலம் விநியோகிக்கப்படும் குடிநீரும், தற்போது உவர்த்தன்மையடைந்து பாவனைக்குதவாத நிலைக்கு வந்துள்ளதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். (113)

## சின்னஞ்சிறு செய்திகள்

### சஞ்சீவனின் நினைவு தினம்

2000 ஆண்டு படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட - யாழ். இந்துக் கல்லூரி மாணவன், சோமசுந்தரம் சஞ்சீவனின் மூன்றாம் ஆண்டு நினைவு தினம், இன்று இந்துக் கல்லூரி தமிழ் மாணவர் ஒன்றியத்தால் உணர்பூர்வமாக அனுஷ்டிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### உயர்தரப் பரீட்சை முடிவுகள் அடுத்த மாதம்!

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை முடிவுகள், அடுத்த மாதம் இரண்டாம் வாரத்தில் வெளியிடப்படும் என, பரீட்சைத் திணைக்களம் அறிவித்துள்ளது.

கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற இந்தப் பரீட்சையின் முடிவுகளை, இந்தமுறை விரைவாக வெளியிடுவதற்கான நடவடிக்கையைப் பரீட்சைத் திணைக்களம் மேற்கொண்டுவருவதாகவும் தெரியவருகிறது.

### நெடுந்தீவுக் கடலில் குருநகர்ப் படகுகள்!

நெடுந்தீவு மத்தி - மணற்கடற்கரைப் பகுதியில், பலவருடங்களின் பின்னர் தற்போது குருநகர், பாசையூர் பகுதிகளைச் சேர்ந்த மீன்பிடிப் படகுகள் தரித்து நின்று தொழிலில் ஈடுபட்டு வருகின்றன.

சமாதானச் சூழல் நிலவும் இக்காலப்பகுதியில், இப்பகுதியில் தொழில் செய்ய வாய்ப்புக் கிடைத்துள்ள போதிலும், இந்திய இழுவைப் படகுகள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதனால், தொடர்ச்சியாக இப்பகுதியில் தொழிலில் ஈடுபடமுடியாத நிலை காணப்படுவதாக மீனவர் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

### கியூடெக் மரநடுகைத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

சுற்றுச் சூழல் வாரத்தை முன்னிட்டு, கியூடெக் நிறுவனத்தினரால் மரநடுகைத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

நேற்றுமுன்தினம் - இளவாலை மாரீசன்கூடல், சகாயபுரம், சென். ஜேம்ஸ், சென்.யூட் ஆகிய பகுதிகளில், கியூடெக் இயக்குநர் அருட்தந்தை ஜெயக்குமார் அடிகளால் இம்மரநடுகைத் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## உயர் பாதுகாப்பு வலய மாநாட்டில்
# நிபந்தனையின் பேரிலேயே பங்கேற்ற படையதிகாரிகள்

பேகவ் ஃபௌண்டேஷன் நிறுவனத்தால் - பண்டதரிப்பில் சில தினங்களுக்கு முன் நடத்தப்பட்ட, உயர் பாதுகாப்பு வலயம் பற்றிய மாநாட்டில் பங்கேற்பதற்கு படைத்தரப்பு, நிபந்தனையின்பேரிலேயே சம்மதித்ததாகத் தெரியவருகிறது.

தென்னாபிரிக்கா மற்றும் நைஜீரியாவைச் சேர்ந்த முன்னாள் இராணுவ உயரதிகாரிகள் கலந்துகொண்ட இம்மாநாட்டில், அரசதரப்பு பங்கேற்றால் - அது உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் தேவையற்ற பிரசாரத்தை உருவாக்கும் என்பதால்- அழைப்பாளர்களில், தமது பெயர்களைப் பதிவு செய்யவேண்டாம் என்ற நிபந்தனையிலேயே - இராணுவ உயரதிகாரிகள் மாநாட்டுக்கு வந்திருப்பதாகப் படைவட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாநாட்டில் பங்கேற்குமாறு- யாழ்ப்பாணத்திலுள்ள இரு சிரேஷ்ட இராணுவ அதிகாரிகளுக்கு - பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோவே உத்தரவிட்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

# ஓமந்தையில் மீள்குடியமர்வோருக்கு "சேவா லங்கா" நிறுவனம் உதவி

ஓமந்தையில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கு, "சேவா லங்கா" நிறுவனம் உதவிகளை வழங்க முன்வந்துள்ளது.

இவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்திசெய்யும் வகையில், முதற்கட்டமாக விவசாய உபகரணங்களை அது வழங்கியுள்ளது.

மேலும், முன்னுரிமை அடிப்படையில் இக்குடும்பங்களுக்குத் தற்காலிக வீட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கான மூலப்பொருட்களையும் "சேவா லங்கா" வழங்கவுள்ளது.

இராணுவத்தினர் அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, கடந்த மாதம் 18 ஆம் திகதி முதல் ஓமந்தைப் பகுதியில் மக்கள் குடியேறி வருகின்றமை தெரிந்தே. (122)

# அடையாள அட்டைகள் வழங்க நெடுந்தீவில் நடமாடும் சேவை

(நெடுந்தீவு)

தேசிய அடையாள அட்டை வழங்கலுக்கான நடமாடும் சேவை, நெடுந்தீவு பிரதேச செயலகப்பிரிவில் எதிர்வரும் 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 11 மணிமுதல் நடைபெறவுள்ளது.

இதில் 16 வயதுக்கு மேற்பட்ட புதிய அடையாள அட்டை பெறுவோர் மற்றும் தொலைந்த, பழுதடைந்த அடையாள அட்டைகள் மீளப் பெறுவோரும் - தங்கள் பகுதி கிராம அலுவலர்களிடம் தொடர்பு கொண்டு, நன்மைபெறலாமென நெடுந்தீவு பிரதேச செயலர் எஸ். பேரானந்தன் அறிவித்துள்ளார். (113)

# மரணவிசாரணை அதிகாரியின்றி பூநகரி மக்களுக்கு பெரும் சிரமம்!

(ஆழியவளை)

பூநகரிப் பிரதேசத்தில் மரண விசாரணை அதிகாரிகள் இல்லாமையால், பொதுமக்கள் பலத்த சிரமங்களை அனுபவித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பாரிய பிரதேசமாகவுள்ள பூநகரிப் பிரதேசத்தில், முன்னர் - பல்லவராயன்கட்டு, பொன்னாவெளி, செடியகுறிச்சி ஆகிய இடங்களில மூன்று பகுதிகளுக்கென மரணவிசாரணை அதிகாரிகள் இருந்தனர். தற்போது பொன்னாவெளி மரணவிசாரணை அதிகாரி மட்டுமே கடமைபுரிகின்றார்.

இந்த நிலைமை காரணமாக, திடீர் மரணங்களின்போது மக்கள் பல இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (122)

# யாழ்.மாவட்ட அடிப்படையில் தாச்சிச் சுற்றுப்போட்டி!

யாழ்.மாவட்டத் தாச்சிச் சங்கம்- மாபெரும் தாச்சிச் சுற்றுப்போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்தப் போட்டிகளில், மொத்தமாக இருபத்தைந்து விளையாட்டுக் கழகங்கள் பங்கேற்கவுள்ளன. இரண்டு பிரிவுகளாக இந்தச் சுற்றுப் போட்டி நடத்தப்படும்.

கட்டுடை விநாயக மைதானத்தில் நடைபெறும் இப்போட்டிகளில்- வீரர்கள் அனைவரும், சீருடையுடனேயே விளையாடவேண்டுமென அறிவிக்கபபட்டுள்ளது.

இறுதிப் போட்டிகளில் பங்கேற்கும் கழகங்களிலிருந்து தலா ஒரு வீரர், மாவட்டத் தாச்சி அணிக்குத் தெரிவுசெய்யப்படவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### துர்க்காதேவி மஹோற்சவம்

சாவகச்சேரி ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மஹோற்சவம், எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமாகி - தொடர்ந்து பன்னிரெண்டு நாட்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 27 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் திங்கட்கிழமை தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளது.


## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

றோணியோ இயந்திரம் **Super Fax** 350 மொடல் மற்றும் தமிழ் தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு. தொடர்பு:**R.**மருதம், 66, மணிக கூட்டு கோபுர வீதி, (ஆஸ்பத்திரி முன்பாக) யாழ்ப்பாணம். (சி-1233)

## புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

மலிவு! மலிவு!! மலிவு!!!

அனைவரது வேண்டுகோளுக்கு இணங்க அண்மைக்காலத்து வெளியீடுகளான- மருத்துவத்துறை, விஞ்ஞானத்துறை, கணிதத்துறை, வர்த்தகத்துறை, முகாமைத்துவத்துறை, விவசாயத்துறை, கலைத்துறை, நாவல்கள், சிறுவர்களுக்கான ஆங்கில, தமிழ் நூல்கள் பல்துறைசார்ந்த அகராதிகள் பட்டப்பின் படிப்பிற்கான நூல்கள் சார்ந்த சகல நூல்களும் மலிவு விலையில் விற்பனை செய்வதற்கான புத்தகக் கண்காட்சியினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக் கழக சமூகத்துடன் இணைந்து கொழும்பு ஜெயா புத்தக நிலையத்தின் அனுசரணையுடன் நடாத்துகின்றது.

**இடம்** : யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடம், முகாமைத்துவ மண்டபம் II
**காலம்** : 15.07.2003 தொடக்கம் 30.07.2003 வரை
**நேரம்** : தினமும் காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (பு.நே)

*குறிப்பு:* இதுவரை கண்டிராத, எதிர்காலத்தில் கிடைக்க முடியாத சலுகை விலையில் புதிய வெளியீடுகள் விற்பனை செய்யப்படுவதால், உயர் கல்வி நிறுவனங்கள், பாடசாலைகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள், பிரதேசசபைகள், மற்றும் தனிப்பட்டோர் கொள்வனவு செய்து பயனைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(420)

## நிறஞ்சனாஸ் சங்கானை

விஜய், மீரா ஜஸ்மின் நடித்த



புதிய கீதை

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)
தினசரி இரவு. 8.45 (பு.நே)

THE LORD OF THE RINGS

(சி-1138)

## ராஜா யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும்
ஒரே தின வெளியீடு
மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி
நடித்த A.V.M இன்



பிரியமான தோழி

10.30, 2.30,
ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.
இயக்கம்: விக்ரமன்
(சி-1137)

ஓம் முருகா



## தொண்டைமானாறு செல்வச்சந்நிதி கோயில்

2003 ஆம் ஆண்டிற்கான சில விஷேட

### உற்சவ தினங்கள்

| | | |
|---|---|---|
| 14.07.03 | ஆனி | 30 திங்கள் - ஆனிப் பொங்கல் - (இன்று இரவு) |
| 28.07.03 | ஆடி | 12 திங்கள் - கதிர்காமம் கொடி |
| 12.08.03 | ஆடி | 27 செவ்வாய் கதிர்காமம் தீர்த்தம், இரவு திருவிழா |
| 27.08.03 | ஆவணி | 10 புதன் இரவு 12.00 மணி செல்வச்சந்நிதி கொடியேற்றம் |
| 10.09.03 | ஆவணி | 24 புதன் - செல்வச்சந்நிதி தீர்த்தம் |

உற்சவகால பூசகர்
ஸ்ரீ ஆறுமுகசாமி ஐயர் - சிவசண்முக ஐயர்

இப்படிக்கு
2003 ஆம் ஆண்டு திருவிழா உரிமையாளர்,
தங்கராசா ஐயர் - கனகேந்திரம் ஐயர்.

(419)

# வட-கிழக்கு அதிகாரிகளுக்கு பயிற்சி;

# மற்றொரு இந்திய அதிகாரிகள் குழு!

## மிக விரைவில் திருமலை வருகிறது

(திருகோணமலை)

வட - கிழக்கு மாகாணசபையின் அதிகாரிகளுக்கு விசேட பயிற்சி களை வழங்கவும், புனர்வாழ்வு -புனர மைப்புச் செயற்திட்டங்களில் இணைந்து பணியாற்றவும், மற்று மொரு இந்திய அதிகாரிகள் குழு மிகவிரைவில் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இவ்வாறு பயிற்சி வழங்கவும், புனர்வாழ்வு செயற்திட்டங்களில் இணைந்து பணியாற்றுவதற்காகவும் இந்தியாவில் இருந்து வருகை தந்த அதிகாரிகள் குழுவொன்று ஏற்க னவே இங்குவந்து திருகோணமலை யில் தங்கியுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் இங்கு வந்த இந்தக் குழுவினர், வட - கிழக்கு மாகாணசபை அதிகாரிகளுக் குப் பயிற்சியளித்து வருகின்றனர். அத்துடன் - அநேகமான புனர் வாழ்வு மற்றும் புனரமைப்பு செயற் திட்டங்களில் மாகாணசபை அதி காரிகளுடன் இணைந்து இவர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

ஒப்பந்த அடிப்படையில் ஏற்க னவே திருமலையில் பணியாற்றி வரும் இந்திய அதிகாரிகள் குழுவில் நாகராஜு, வரதன் ஆகிய அதிகாரி கள் அடங்கியுள்ளனர்.

இவர்களின் ஒப்பந்தகாலம் இம் மாதத்துடன் நிறைவடையவுள்ளது. இம்மாத இறுதியில் இவ்விரு அதி காரிகளும் நாடு திரும்பவுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலாகவே புதிய அதிகாரிகளைக் கொண்ட மற்றுமொரு குழு இந்தியாவிலி ருந்து விரைவில் திருமலைக்கு விஜ யம் செய்யவுள்ளது.

இக்குழுவினரும் சுமார் ஆறு மாத கால ஒப்பந்த அடிப்படையி லேயே சேவையாற்றவுள்ளனர் எனத் தெரியவருகிறது. (க)

### திலக் மாரப்பனவின் இஸ்ரேல் விஜயத்தைக் கண்டிக்கும் அரபுக்கள்!

(அம்மான்)

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப் பன - இஸ்ரேலுக்கு ஆயுதக் கொள் வனவுக்காகச் சென்றிருக்கும் விட யத்தை-அரபுலக இஸ்லாமிய அமைப் புக்கள் பலவும் கண்டிப்பதான போக் கில் செய்திகள் வெளியிட்டுள்ளன.

ஜிஹாத் யுன்ஸ்பன் (Jihad Unsun) என்ற அரபு இணையத்தளம் - சியோனிஸ்ட்களின் நிலப்பரப்புக்குள் இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் நுழைந்திருப்பதாகக் கூறியிருப்பது டன் -

தமிழ்ப் போராளிகளின் வேகப் படகுகளைத் தாக்குவதற்குச் சியோ னிஸ்ட் ஆயுதங்களிலே (Zionist weapons) இலங்கை அரசாங்கம் தங்கியிருப்பதாகவும் செய்தி வெளி யிட்டிருக்கிறது.

# இஸ்ரேலிடம் ஆயுத கொள்வனவு; போருக்குத் தயாராகிறதா அரசு?

## கேள்வியெழுப்புகிறார் செல்வம் அடைக்கலநாதன்



பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத் தளபதி தயா சந்தகிரியும் இஸ்ரேலுக்குச் சென்று ஆயுதங்களைக் கொள்வ னவு செய்வதில் தீவிரம் காட்டியிருப் பது - தமிழ் மக்களிடம் ஐ.தே.கட்சி அரசாங்கம் அமைதி வழிகளில் தீர் வினைக் காணும் முயற்சிகளில் ஈடு படுவதாகக் கூறிக்கொள்வதில் நம் பிக்கையீனத்தை ஏற்படுத்தியிருப்ப தாக, வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கல நாதன் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும், ரெலோ அமைப்பின் தலை வருமான செல்வம் அடைக்கால நாதன் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

அமைதி முயற்சிகள் முன்னெ டுக்கப்பட்டு வருகையில் - இலங்கை யின் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவும், கடற்படைத்தளபதி தயா சந்தகிரியும் - இஸ்ரேலுக்குச் சென்று, கடற்படைக்கான ஆயுதங் கள் கொள்வனவு பற்றிப் பேசியிருக் கிறார்கள். ஆனால், மறுபுறத்திலோ போர்நிறுத்த ஒப்பந்தத்தை நடை முறைப்படுத்துவதில் கடற்படையி னர் அசட்டையீனத்தைக் காட்டிவரு கின்றனர்.

அமைதி முயற்சிகளைச் சீர்கு லைக்கும் நோக்குடன் கடற்படையி னரின் தாக்குதல் நடவடிக்கைகள் அமைந்து வருகின்றன. இவ்வாறான சூழ்நிலையில் பாதுகாப்பு அமைச் சரும், கடற்படைத் தளபதியும் மிகப் பெரும் ஆயுதக் கொள்வனவிற்காக இஸ்ரேலுக்குச் சென்றிருப்பது, தமிழ் மக்களின் மனதில் ஐ.தே.முன்னணி அரசாங்கத்தின் அமைதி நிலைப் பாடு பற்றிய சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கிறது.

கடந்தகால சிங்கள அரசாங்கங் களைப்போலவே, மீண்டுமொரு யுத் தத்திற்கு ஐ.தே.கட்சி அரசாங்கம் தயாராகி வருவதாகவே எமது மக் கள் சந்தேகப்படுகிறார்கள்.

அரசாங்கம் இவ்வாறு ஆயுதக் கொள்வனவுகளில் ஈடுபட்டுக் கொண்டு, அமைதி முயற்சிபற்றிப் பேசிவருவதை, இரட்டைத் தன்மை யானது என்று நாங்கள் கண்டிக் கிறோம்.

இது இவ்வாறிருக்க, விடுதலைப் புலிகளுடனான பேச்சுக்களில் பங்கு பற்றி வருகின்ற அமைச்சர் மிலிந்த மொறகொடகூட, மிக அண்மையில் அமெரிக்காவுக்குச் சென்று நவீன ரகக் கடற்படைக் கப்பலை இலங் கைக் கடற்படைக்குக் கொள்வனவு செய்வது சம்பந்தமாகப் பேசி வந்தி ருக்கிறார். இவ்வாறான முயற்சிகள் அமைதியின் மீதான நம்பிக்கையைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சிதைத்து வருகின்றது என செல்வம் அடைக் கலநாதன் மேலும் தெரிவித்திருக்கி றார்.

### காணாமற்போனோருக்கு படைகளே காரணமென கடும் குற்றச்சாட்டு

இலங்கைத்தீவில் கடந்த பல வருடங்களாகக் காணாமற்போனோர் தொடர்பான சம்பவங்கள் பலவற்றுக் கும், அரசாங்கப்படைகளே கார ணம் எனக் குற்றஞ்சாட்டியுள்ளது சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் - மனித உரிமைகள் நடவடிக்கைகள் மையம் (HUMAN RIGHT ACTION CENTER)

காணாமற்போனோர் பற்றிய தகவல்களைக் கடிதங்களாக்கி- இலங்கை ஜனாதிபதிக்கும், பிரதம ருக்கும் அனுப்பும்படியும் - அதன் பிரதிகளை மின்னஞ்சல் ஊடாக தம க்கு அனுப்புமாறும் இந்த அமைப்பு கேட்டுள்ளது.

# அதிதி விரிவுரையாளர்கள் கொடுப்பனவில் இனிவெட்டு

## பல்கலைக்கழகங்களில் நிதி நெருக்கடி

பல்கலைக்கழகங்களில் அதிதி விரிவுரையாளர்களாகக் கடமையாற்று பவர்களுக்கான கொடுப்பனவுகளை, மீளாய்வு செய்து குறைத்துக் கொள் ளும்படி பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு - சகல பல்கலைக் கழகங்களின் துணைவேந்தர்களுக் கும் புதிய சுற்றுநிருபம் மூலம் அறி வித்துள்ளன.

புதிய சுற்றறிக்கையின்படி, மறு சீரமைக்கப்பட்ட அதிதி விரிவுரை யாளர்களுக்கான சம்பளக் கொடுப் பனவுகள் பின்வருமாறு அறிவிக்கப்பட் டுள்ளது. பட்டப் பின் படிப்பு கற்கை நெறிகளுக்கு- மணித்தியாலம் ஒன் றிற்கு விரிவுரைகள் வழங்குவதற்கு 500 முதல் 750 ரூபாவும், பயிற்சிகளை மேற்கொள்வதற்கு 250 முதல் 300 ரூபாவும், பட்டதாரிக் கற்கைகளுக் குரிய விரிவுரைகளுக்கு மணித்தியா லம் ஒன்றிற்கு 300 முதல 500 ரூபா வும், பயிற்சிகளுக்கு 150 முதல் 200 ரூபாவும்,

ஏனைய பல்கலைக்கழக கற்கை நெறிகளுக்குரிய விரிவுரைகளுக்கு 150 முதல் 200 ரூபாவும், பயிற்சிக ளுக்கு 100 முதல் 150 ரூபாவும், வருகைநேர செயன்முறையாளர்க ளுக்கு மணித்தியாலமொன்றிற்கு 150 முதல் 200 ரூபாவும் வழங்கப்பட லாம் எனப் பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஆங்கிலக் கற்கை நெறிகளுக்கான வருகைதரு செய் முறையாளர்களுக்கு, மணித்தியாலத திற்கு 250 முதல் 300 ரூபா வரை வழங்கப்படலாம் எனப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு- நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழ களுக்கும் அனுப்பிவைத்துள்ள சுற்ற றிக்கையில் மேலும் குறிப்பிட்டுளளது. இதற்கு - பல்கலைக்கழகங்களி லுள்ள நிதிப்பற்றாக்குறையே முக் கிய காரணம் எனக் கருதப்படுகிறது.

# இடைக்கால நிர்வாகத்தில் 'வீட்டோ' அதிகாரம் வேண்டும்!

## முஸ்லிம் கட்சிகள் பிரதமரிடம் கோருகின்றன

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகமொன்றை அமைப்பதற்குத் தாங்கள் ஆதரவு அளித்தாலும், நிதி நிர்வாகம் பற்றிய விவகாரங்களில் முஸ்லிம்களும் முக்கிய பங்காற்று வதற்கு வழிசெய்வதற்குரியதாக, 'வீட்டோ' அதிகாரங்கள் கொண்டதான கட்டமைப்பை உருவாக்க வேண்டு மென, வடக்கு - கிழக்கிலுள்ள முஸ் லிம் அமைப்புக்களும், கட்சிகளும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வலியுறுத்தியிருப்பதாகத் தெரிய வருகிறது. வட-கிழக்கிலுள்ள முஸ் லிம் தலைமைகள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து ஏற்க னவே இது தொடர்பாகப் பேச்சு நடத்தியிருப்பதுடன், மேலதிக ஆராய் வுக்காக இன்றும் அவரைச் சந்திக்க இருப்பதாக முஸ்லிம் கட்சிகளின் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்தச் சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ் லிம் காங்கிரஸ், தேசிய ஐக்கிய முன்னணி, அஷ்ரப் காங்கிரஸ் ஆகி யன பங்குபற்றும் எனவும் தெரிய வருகிறது. இதேவேளை, வடக்கு- கிழக்கு இடைக்கால நிர்வாகத்தில் முஸ்லிம் மக்களுக்குரிய பிரதிநிதித் துவம் வழங்கவேண்டுமானால், அதி காரப் பரவலாக்கலில் முஸ்லிம் மக் கள் உரியவாறு கௌரவிக்கப்பட வேண்டுமென வன்னிப் புனர்வாழ்வு அமைச்சர் நூர்தீன் மசூர், தான் பிரதமரிடம் கூறியிருப்பதாக தெரிவி த்திருக்கிறார்.

இந்த விவகாரம் தொடர்பாகப் பேசிய தேசியத் ஐக்கிய முன்ன ணியின் பொதுச்செயலாளர் எம். எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாஹ் கருத்து வெளியிடும்போது - அரசாங்கத்தின் இடைக்கால நிர்வாக யோசனைகளில் தாங்கள் முழுமையாக ஈடுபடவில்லை எனவும, முஸ்லிம மக்களுடைய தனித் துவத்தைப் பேணும் விதமாகவே இடைககால நிர்வாகம் அமைக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

# போர் நிறுத்தத்தை முறிக்க வேண்டுமென ஜே.வி.பி கேட்டதற்கு ஜனாதிபதி மறுப்பு!



ஜனாதிபதி சந்திரிகா

விடுதலைப் புலிகளுடனான போர் நிறுத்த ஒப்பந்தத்தை - அரசாங்கம் உடனடியாக முறித்துக்கொள்ள வேணடுமென, ஜே.வி.பியினர் விடுத்த கோரிக்கையை, ஜனாதிபதி சந்தி ரிகா குமாரதுங்க நிராகரிப்பதாக அறிவித்திருக்கிறார்.

விடுதலைப்புலிகளுடன் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த ஒப்பந் தத்தை உடனடியாக இடைநிறுத்து வதுடன், நோர்வே அனுசரணையா ளர்களை அமைதி முயற்சிகளிலி ருந்து விலக்கவும், இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவி னரை நாட்டைவிட்டு வெளியேற்ற வேண்டும் எனவும் ஜே.வி.பியினர் விடுத்த கோரிக்கைகளை, ஜனா திபதி சந்திரிகா நிராகரித்திருப் பதாகப் பொ.ஐ.முன்னணி வட்டாரங்க ளிலிருந்து தெரியவருகிறது.

பொ.ஐ.முன்னணியுடனான அர சியல் கூட்டணியை அமைப்பதற்கு ஏதுவாகவே இந்தக் கோரிக்கைகளை ஜே.வி.பியினர் முன்வைத்திருப்பதா கவும்,

ஆனால் - இவை பொருத்தமற் றவை, ஏற்றுக்கொள்ள முடியாதவை யென ஜனாதிபதி சந்திரிகா நிராக ரித்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளை - ஜனாதிபதி சந்தி ரிகாவுக்கும், ஜே.வி.பி. பிரதிநிதிக ளுக்கும் இடையிலான சந்திப்பொன்று கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற போது, புதிதாக அமைக்கப்படவுள்ள கூட்டணியில் ஜே.வி.பிக்கு தேசிய அமைப்பாளர் பதவியை வழங்குவ தற்கு-ஜனாதிபதி சந்திரிகா சம்மதம் தெரிவித்திருந்தபோதும், ஜே.வி.பி சார்பில் அதற்கு இணக்கம் தெரிவிக் கப்படவில்லை எனவும் தெரியவருகி றது.

பொ.ஐ.முன்னணியும், ஜே.வி.பி யும் இணையவிருக்கின்ற புதிய கூட்டணியில்- தமக்கு முக்கிய பொறுப்புக்கள் வழங்கப்பட வேண்டு மென்பதில் ஜே.வி.பி உறுதியாக இருப்பதாக, அதன் செயலாளர் ரில் வின் சில்வா பின்னர் செய்தியாளர் களிடம் தெரிவித்திருந்தமை குறிப்பி டத்தக்கது.

இதேவேளையில் - கடந்த வியா ழக்கிழமையன்று நடைபெற்ற ஜனா திபதியுடனான சந்திப்பின்போது - விடுதலைப் புலிகளுக்கு இடைக் கால நிர்வாகம் வழங்குவது தொடர் பாக ஜனாதிபதியின் தெளிவான கருத்துப்பற்றி ஜே.வி.பி. கேட்டதா கவும்,

இதற்குப் பதிலளித்த - ஜனாதி பதி, இடைக்கால நிர்வாகம் பற்றிய முழுமையான செயற்பாடுகள் முன் னெடுக்கப்படாத நிலையில், அதுபற் றிக் கருத்துக் கூற தான் முயல்வது ஒரு முதிர்வற்ற செயலாகவே இருக் குமெனப் பதிலளித்ததாகவும், ஜனா திபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் கொழும்பில் தெரிவித்தார்.

அத்துடன் - ஜே.வி.பிக்கும், பொ.ஐ.முன்னணிக்கும் இடையிலான அரசியல் கூட்டணியில் - ஜே.வி.பிக்கு எக்காரணம் கொண்டும் தலைமைப் பொறுப்பை வழங்கமுடியாது என வும், ஜனாதிபதி இந்தக் கூட்டணி யின் தலைவியாகத் தொழிற்படுவார் என்பதில், பொ.ஐ.முன்னணி உறுதி யாக இருப்பதாகவும் ஜனாதிபதி யின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் மேலும் தெரிவித்தார்.



ரில்வின் சில்வா

# பாடசாலை பஸ்சேவை குறைப்பால்
# தென்மராட்சி மாணவர்கள் அவதி!

(தென்மராட்சி)

தென்மராட்சிப் பகுதியிலிருந்து யாழ்நகரப் பாடசாலைகளுக்குச் செலலும் மாணவர்களின் வசதிகருதி, 2000 ஆம் ஆண்டு மே மாதத்திற்கு முன்னர் நடத்தப்பட்டு வந்த இரு பாடசாலை பஸ் சேவைகளை, வட பிராந்திய போககுவரத்துச் சபை தற்போது ஒன்றாகக் குறைத்துள்ளது.

ஆண்கள், பெண்கள் என இரு பிரிவாக நடத்தப்பட்ட பாடசாலை பஸ்சேவை - ஒன்றாகக் குறைக்கப்பட்டது மட்டுமன்றி, அச்சேவை கூட ஒழுங்கான நேரத்திற்கு நடத்தப்படுவதில்லை எனவும் புகார் தெரிவிக்கப்படுகிறது.

இதனால், பாடசாலை மாணவர்கள் பலர் சாதாரண பஸ்ஸில் நெருக்கியடித்துப் பயணிப்பதும், பலர் நேரங் கழித்துப் பாடசாலை செல்லவேண்டியிருப்பதும் வாடிக்கையாகிவிட்டது.

இதேவேளை - இடநெருக்கடிகளால் பருவகாலச்சீட்டுப் பெற்ற மாணவர்களும், அரச உத்தியோகத்தர்களும் பணம் செலுத்தி, தனியார் பஸகளில் செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையும் பல சந்தர்ப்பங்களில் ஏற்பட்டுள்ளது. இதனால் - முன்பிருந்ததைப்போல ஆண்கள், பெண்கள் என இருபாடசாலை பஸ் சேவைகளையும் மீள ஆரம்பிக்க வேண்டும் எனவும், அலுவலக நேரத்திற்குள் மேலதிகமாக ஒரு பஸ் சேவையையும் நடத்தவேண்டும் எனவும் பொது மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (24)

## தேசியமட்டப் போட்டிகளுக்கு அக்கராயன் மாணவர்கள் தெரிவு

அண்மையில் நடைபெற்ற வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கிடையேயான மாகாண மட்ட மெய்வல்லுநர் திறனாய்வுப் போட்டியில், கிளிநொச்சி அக்கராயன் அரசினர் தமிழ்க்கலவன் வித்தியாலய மாணவர்கள் சில போட்டிகளில் வெற்றியீட்டியுள்ளனர்.

19 வயதிற்குக் கீழ் பிரிவில், ஆண்கள் பிரிவிற்கான உயரம் பாய்தல் போட்டியில், மேற்படி பாடசாலை மாணவன் கு.கோபிநாத் முதலாம் இடத்தையும் -

19 வயதின் கீழ் பெண்கள் பிரிவிற்கான ஈட்டியெறிதலில், மாணவி ச.ஜெயக்குமாரி இரண்டாம் இடத்தையும் -

13 வயதின்கீழ் பெண்கள் பிரிவிற்கான உயரம் பாய்தலில், மாணவி ம.சுதர்சினி நான்காம் இடத்தையும் பெற்றுத் தேசிய மட்டத்திற்குத் தெரிவாகியுள்ளனர்.

இதில், கோபிநாத் உயரம் பாய்தல் போட்டியில் சென்ற வருடமும் முதலாம் இடத்தைப் பெற்றவர் என்பதும், ஜெயக்குமாரி சென்ற வருடம் ஈட்டி எறிதலில் நான்காம் இடத்தைப் பெற்றவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க)

## "உதைபந்தாட்ட நுட்பங்கள், விதிகள்"; நூல் கிளிநொச்சியில் வெளியீடு!

"உதைபந்தாட்ட நுட்பங்கள், விதிகள்" நூல் வெளியீடு - கடந்த புதன்கிழமை கிளிநொச்சி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நூல், முன்னைநாள் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை உடற்கல்வி போதனாசிரியரும், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்விப் போதனாசிரியருமான ம.பத்மநாதனால் தமிழில் எழுதப்பட்டது.

தமிழீழ விளையாட்டுத்துறை பொறுப்பாளர் பாப்பா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முதற்பிரதியை அரசியற்துறைத் துணைப் பொறுப்பாளர் தங்கனிடமிருந்து முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிபபாளர் குருகுலராசா பெற்றுக்கொண்டார். கிளிநொச்சி வலய பிரதிக் கல்விக் பணிப்பாளர் வெளியீட்டுரையை நிகழ்த்தினார்.

மிகநீண்ட காலத்தின் பின்னர் விளையாட்டு வீரர்களுக்கும், விளையாட்டு மத்தியஸ்தர்களுக்கும் ஒரு சிறந்த வெளியீடாக இந்த நூல் அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

### பனைமரம் கடத்தியோர் அகப்பட்டனர்

அனுமதிப்பத்திரமின்றி, சட்டவிரோதமாக பனை மரங்களை வாகனத்தில் ஏற்றிச்சென்றவர்களைக் கொடிகாமம் பொலிஸார் தடுத்து வைத்துள்ளனர்.

கொழும்பு தொட்டலந்தவைச் சேர்நதவர்கள், இரண்டு கன்ரர் வாகனங்களில் மல்லாகத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி அனுமதியின்றி பனை மரங்களைக் கொண்டுசென்றபோதே - பொலிஸாரிடம் அகப்பட்டனர்.

### திருடர் தொல்லை அதிகரிப்பு

புத்தூர், ஆவரங்கால் பகுதிகளில் திருடர்களின் தொல்லை நாளுக்குநாள் அதிகரித்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இவ்வாறு இரு கடைகள் திருடர்களால் உடைக்கப்பட்டுக் கொள்ளையடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (110)

### வன்னி வேளாண் நிறுவனம் செவ்வாய் திறப்பு

கிளிநொச்சியில் வன்னி வேளாண் தொழில்நுட்ப நிறுவனம் - எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்குத் திறந்துவைக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### மிகவிரைவில் 5 ரூபா புதிய நாணயம்

புத்த சாசன அமைச்சின் கோரிக்கைக்கிணங்க, மத்திய வங்கி - புதிதாக 5 ரூபா நாணயங்களை வெளியிடத் தீர்மானித்திருக்கிறது. இந்த நாணயங்கள், 'சியாம்பலி மகாநிக்காயா' என்ற பௌத்த சங்கத்தின் 250 ஆவது வருடநிறைவை குறிக்கும் முகமாக வெளியிடப்பட்டுள்ளன.

செவ்வரளிப் பூக்கள் வெளியீட்டு விழாவிலிருந்து..







யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ந.கிருஷ்ணசிங்கம் எழுதிய 'செவ்வரளிப் பூக்கள்' சிறுகதைத் தொகுதி நூல் வெளியீட்டு விழாவில் - தமிழீழ கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை தேசியக்கொடியேற்றுவதை முதற்படத்திலும்,

யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் மோகனதாஸ் நூலின் முதல் பிரதியை வெளியிட்டுவைக்க, அதனை கவிஞர் புதுவை இரத்தினதுரை பெற்றுக்கொள்வதை இரண்டாவது படத்திலும், 'வெளிச்சம்' சஞ்சிகையின் ஆசிரியர் சி.கருணாகரன் மதிப்பீட்டுரை நிகழ்த்துவதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படங்கள் - லிவிங்ஸ்டன்)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

இரண்டாவது அகவையில்



பெயர் - சு.செங்கதிர்
முகவரி - அனிஞ்சிலடி, கரவெட்டி.

நான்காவது அகவையில்

பெயர் - சி.செந்தூரன்
முகவரி - வேதரடைப்பு, காரைநகர்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு:------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------
பெற்றார் ஒப்பம்


## வளர்ப்பு நாய்க்கு விசர்நோய் ஏற்பட்டு வீட்டுக்காரர்களை கடித்துக்குதறியது!

(சாவகச்சேரி)

வளர்ப்பு நாய்க்கு விசர் ஏற்பட்டு, வீட்டுக்காரர்களைக் கடித்துக்குதறிய சம்பவமொன்று - கடந்த வெள்ளிக்கிழமை கச்சாயில் இடம்பெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நாயை வளர்த்து வந்த வீட்டுக்காரர்களான அருணாசலம் சிவதாசன், அருணாசலம் செல்லையா ஆகிய இருவரும் நாயினால் கடியுண்டு மயங்கிய நிலையில் - யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். இவர்களைக் கடித்த நாய் மறுநாள் இறந்துவிட்டதாகத் தெரியவருகிறது.

கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் அதேயிடத்தைச் சேர்ந்த ஒரே வீட்டில் வசிக்கும் ஐந்து பேரை இந்த நாய் கடித்துள்ளதாகவும் தெரியவருகிறது. இவர்களும், யாழ். போதனா வைத்தியசாலையில் தடுப்பூசி ஏற்றிவிட்டு வீடு சென்றுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வடமராட்சி கிழக்கு ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகளுக்கு ஏற்பாடு!

(ஆழியவளை)

வடமராட்சியில் இருந்து மருதங்கேணிப் பிரதேசத்திற்கு கற்பிக்கச் செல்லும் ஆசிரியர்களுக்கு தங்குமிட வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழீழக் கல்விக்கழகத்தினர், கடற்புலிகளின் அரசியற்துறையினர் மற்றும் பாடசாலை சமூகத்தினர் இணைந்து - ஆசிரியர்கள் தங்கி நின்று கல்வி கற்பிக்கும் வகையில், வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளனர்.

மருதங்கேணி, ஆழியவளை, செம்பியன்பற்று, வெற்றிலைக்கேணி ஆகிய இடங்களில், ஆசிரியர்கள் தங்கியிருந்து கல்வி கற்பித்து வருகின்றனர்.

அண்மைக்காலத்தில் - சுமார் 50 இற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் வடமராட்சியில் இருந்து, இப்பிரதேசத்தில் இயங்கும் 10 பாடசாலைகளுக்கு நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இவர்களில் பெரும்பாலானோர் ஆசிரியைகளாவார். (122)

## சின்னஞ்சிறு செய்திகள்

### மாடுகளை ஏற்றிவந்தோர் பொலிஸாரிடம் பிடிபட்டனர்

(கொடிகாமம்)

வன்னிப்பகுதியிலிருந்து பதினாறு பசுமாடுகளை லொறி ஒன்றில் அடைத்து ஏற்றிவந்தவர்களை - கொடிகாமம் பொலிஸார், பசுக்களை வதைத்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்து, நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தினர்.

இது தொடர்பான விசாரணைகளை, சாவகச்சேரி நீதிமன்ற நீதிவான் எதிர்வரும் இருபத்தி மூன்றாம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். மாடுகள் தற்போது பொலிஸ் நிலையத்தில் கட்டப்பட்டுள்ளதாக, கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர். •

### இடமாற்றம் ரத்தானது!

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலகத்தில் இயங்கும் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்திற்கு, இடமாற்றம் செய்யப்பட்டிருந்த வேலணைப் பிரதேச செயலக எழுதுநர், திருமதி ஆர.ஸ்ரீரங்கராஜாவின் இடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவருக்குப் பதிலாக, சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் கடமையாற்றும் அ.மதியகுணரட்னம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

எம்பொழுதுமே இயலாது என்றுதான் இதனை எழுதத் தொடங்கினேன். ஆனால், எழுதப்படவேண்டும். காலங்கள் கழிகின்றன. வயது வட்டுக்குள் போகின்றது. ஞாபகங்கள் தொலைந்துபோகின்றன. மறதி கூடிவருகின்றது. எஞ்சி இருக்கின்ற ஒன்றிரண்டையாவது எழுத்தில் பதித்து விட வேண்டும் என்கின்ற ஆவல். சராசரி வாழ்வில் இருந்து, இயந்திரங்களுடன் இயங்கி, அலுத்து, களைத்து வருகையில் -எழுது என்று சொன்னால் ஏலாதுதான். கற்பனையில்

# சூலவைரவா

பிறக்கின்ற கதை அல்ல இது. காலத்தில் பிறந்த கதை. எழுதியே ஆகவேண்டும். எழுத்தில் வலிமை சேர்க்கவேண்டும். அதுதான் இயலாமல் போகிறது. எப்பொழுதுமே இயலாது என்றுதான் இதனை எழுதத் தொடங்குகின்றேன்.

எப்படிச் சொல்வேனோ? சொல்லில் சுவை சேர்ப்பேனோ? எதுவும் நான் அறியேன். இதுவும் என் வாழ்விற்கு முந்தைய கதைதான். 1958 ஆம் ஆண்டு கலம்பகம் நடக்கிறபோது - அம்மா, அப்பா தம் மகளைக் காப்பாற்றிக் கொண்டு வந்த ஒரு கதை சொன்னேன். கவுணாவத்தை வேள்வி அன்று தப்பிப் பிழைத்து வீடு வந்த மறுகதை சொன்னேன். இவற்றின் பின்னால் வந்த இன்னொரு கதை இது.

கதை என்றா சொன்னேன்? கதை கேட்கும் காலத்தில் நீங்களும் இல்லை. கதை சொல்லும் பொழுது எனக்கும் வாய்த்ததில்லை. இது வரலாறு. வாழ்வின் குறிப்பு.

அம்மா கடற்கரை மணலில் குறிபோட்டா. வைரவர் சூலக்குறி அது.

“சூலவைரவா சுழட்டிக்குத்தடா

“ஞானவைரவா நக்கிப்பிடியடா”

சூலம் கீறி அம்மாவின் வாய் முணுமுணுத்தது.

அம்மா சிறு பெண்ணாக இருந்தபோது, அந்தக் கடற்கரை மணலில் கெந்தல் அல்லது எட்டுக்கோடு விளையாடிறபோது, வைரவர் சூலம் கீறி சூல வைரவா சுழட்டிக் குத்தடா..! முணுமுணுப்பா. விளையாடினால் வெற்றிதான். அம்மா - காளி! மாகாளி! காளிகள் எப்போதும் தோற்பதில்லை. ஆரும் அழாப்பினால்...? அம்மா அப்போதும் தோற்பதில்லை. கோபம் கண்ணில் கொழுந்து விட்டெரியும். அம்மா அப்போது ருத்திர காளி. “அழாப்பி, குழாப்பி ஆண்டவன் காட்டுவான்” அம்மா கத்துவா. ஆனால் ஆண்டவனுக்காக [illegible] அழாப்பினவளுக்கு [illegible] அழாப்பினவள் கண் இருளும். [illegible] அம்மாவிற்கு [illegible] அப்போதும் கோபம்

விளையாடின. மேகங்கள் யானையாகவும், சிங்கமாகவும், மலையாகவும், மரமாகவும் இன்னும் அநேக சித்திரங்கள் ஆயின. உயர்ந்த கோபுரமும், நீண்ட கோயிலுமாக ஒரு சித்திரம் வரைந்தது. இந்தியாப் பக்கம் தெரிகிறது. அம்மாவுக்கு அச்சித்திரம் என்னவென்று தெரியும். அது சிதம்பரம் கோயில். அம்மா கையெடுத்துக் கும்பிட்டா. அந்த நேரத்து மணலை அள்ளி, நெற்றியில் நீறாய் இட்டா. “ஏன் எங்களை இப்பிடிச் சோதிக்கிறாய்?” எண்டு கேட்டா. வாச்சர் சின்னத்துரையண்ணை பூவரச மரத்தில் கோண் கட்டி, இலங்கை வானொலியின் வர்த்தக சேவையைத் தவழ விட்டிருந்தார். “எஜமான் பெற்ற செல்வமே பசும் பொன்னே, பொன்னின் மணியே அழாதே, அழாதே...” என்று பாட்டு - கடற்கரையில் தவழ்ந்தது. அம்மா அழப்பார்த்தா.

அப்பாவுக்கு வேலை இல்லை. அப்பிடிச் சொல்லமுடியாது. சம்பளம் இல்லை. அதாவது, கையிலை காசில்லை. “கலிபோரஞ், சிக்கன் சூப் வாங்கக் காசில்லை” என்பது போகட்டும். பால்மா வாங்கக் காசில்லை. இந்தக் குண்டுமோளை மெலிவு காணாமல் வளர்க்க ஒன்றுமில்லை. இந்தக் குண்டுப் பெண்ணுக்கு ஆயிரம் ஆயிரம் செய்ய ஆசையிருக்கு. கையிலை காசிலை. மாசத்துக்குக் கிடைச்ச சம்பளம் இல்லை. கன்னம்

ஆசையண்ணை தன் தேத்தண்ணிக் கடையின் படலையை என்றென்றைக்குமாக இறுக்கப்பூட்டினார். என்ன காரணம் என்று நான் இதுவரை கேட்டிலன். அம்மாவும் சொன்னாள் அல்லள். ஆசையண்ணையும் வேளாண்மை செய்யக் கல்மடு போனார். அத்தோடு பகோடா போயிற்று. வேலாயுதண்ணையின் தேத்தண்ணிக்கடை வரும்வரைகக்கும் கீரிமலைக் கடல் உப்பின் மணமே காற்றில் மிதந்தது.

அம்மா பகோடா குடுத்து எல்லாருக்கும் வெறும் தேத்தண்ணி ஊத்தினா. அரைப்போத்தல் பால் வந்தது. அது பிள்ளைக்கு வேணும். பிள்ளை கையில் ஆப்பிட்டதை வாய்க்குள் வைக்கப்பார்த்தது. அம்மா - பிள்ளைக்கு முகம் கழுவிப் பொட்டிட்டா. கன்னத்திலும் கறுப்பிட்டா. வெள்ளைப் பெட்டைக்கு என்ன வடிவாய் இருந்தது. தன் முலை சுரந்து பால் குடுத்தா. பிள்ளைக்கும் பசி அதிகமாயிருந்தது. பிறகுதான் கடற்காற்று நூர்த்து விடாதிருக்க, திரிதூண்டி எடுத்த போத்தல் விளக்கை மூலையில் வைத்தா. கடற்காற்று இன்னும் பலமாக அடித்தது. ‘விளக்கு நூரப்போகுது. பொத்திப்பிடியணை’ அம்மம்மா சொன்னா. அப்பிடிச் சொன்னதை அம்மா கேட்க முன்னம் காற்றுக்கேட்டது. ‘செய்யிறன் விளையாட்டு’ என்று ஒருமுறை சுழற்றி அடித்தது.

‘என்ன நாங்கள் வாறமெண்டு விளக்கை நூக்கிறீங்களோ?’ எண்டு சிவமக்கா கேட்டபடி வந்தா. பிறகு நல்லம்மா மச்சாள், கனகராசாண்ணை, மயில்வாகனண்ணை

# சுழட்டிக் குத்தடா

விரியச் சிரிக்கும் குண்டுமோளின் சிரிப்பில் வரட்சி வரக்கூடாது. கிடையாது என இருந்து தெய்வமோளாய் கிடைத்து வந்தவள். இந்தத் திரவியத்திற்கு யாதொரு தீங்கும் நேரக்கூடாது. இந்த அமுதத்தாரை வயிறு பசித்து அழக்கூடாது. என்ரை மாம்பழக்குஞ்சு, எப்பவும் என்ரை மாம்பழமாகவே இருக்க வேணும்... கண்ணீர் கசிய அந்தக் குண்டு மோளின் கன்னத்தில் இறுக்கிக் கொஞ்சினா அம்மா. மணலில் நடக்க விட்டு விட்டு, அம்மா மணலில் இருந்து கடலைப் பார்த்தா. தோணியோ, வள்ளமோ, படகோ ஒன்றும் போவதாக இல்லை. வத்தைகூட இல்லை. பாய்மரக் கப்பலும் மறைந்து போயிற்று. காங்கேசந்துறைக் கடலில் பெருங்கப்பல் நின்றது. இருட்டுப்போகிறது என்று கப்பலில் லைட்டுக்கள் எரிந்தன. மேற்குக்கடல் மேகத்தில் சிதம்பரக் கோபுரம் காணவில்லை. கூர் கூராய் மேகங்கள் திரண்டிருந்தன. யானையும் இல்லை. சிங்கமும் இல்லை. கமுகும் இல்லை. எதுவென்று தெரியவும் இல்லை. இருட்டுப்பட நின்றது பொழுது. ஆம்பிள்

எல்லாரும் வந்தினம். அம்மா விளக்குக் கொளுத்திவந்தா. திண்ணையில் மொழுகின தரையில் கரியால் தாயக்கோடு கீறியிருந்தது. மயில்வாகனண்ணையும், நல்லம்மா மைச்சாளும் அழாப்பிகள்தான். காலமும், கடலும் அழாப்பி விளையாடுவதிலும் பார்க்கவா? ஆருக்கு என்ன செய்தன? ஆருக்கும் நன்மையை மாத்திரம்தான் நைச்சன. எனக்கேன் இப்பிடி நடக்குது? இதுக்கு ஆரை நோகிறது? ஆரும் அழாப்பி விளையாடுகிறபோது, அம்மா இப்போ ஆத்திரப்படுவதில்லை. வரும் துயர் மறைக்க ‘விளக்கு கூடு பத்துது’ என்று மண்ணெண்ணெய் விடப்போவா. வரும்போது அம்மாவின் நகரவேண்டிய காய்கள் வேறுவேறு கட்டங்களில் இருக்கக் காண்பா.


அது என்னவோ கனகராசாண்ணர் ‘ஆ.... சோணாலு

## இலக்கியச்சோலை

.... சோணாலு இந்தா சோணாலு.... ’ என்று போட்டால் சோணாலு விழுது. அம்மாவன் காய் வெட்டுப்படுது. ‘ஆ.. தாயம்வா தாயம்வா’ எண்டு போட்டால் தாயம் விழுது. அம்மாவின் காய்கள் காய்களாகவே இருக்க, கனகராசாண்ணரின் காய்கள் பழுக்குது. ஒரு தாயம் விழாமல் அம்மாவின் காய்கள் வெளியே வரமுடியாதிருக்க, கனகராசாண்ணரின் காய்கள் முழுவதுமாகப் பழுத்துமிருக்கிறது. அப்போதெல்லாம் ‘சூல வைரவா...’ என்று அம்மாவின் வாய் முணுமுணுக்கவில்லை. ‘அம்மாளே..’ என்று பெருமூச்சு விடுகிறது.

என்றாலும், அம்மா முற்று முழுதாகத் தோற்கிற நேரத்தில் அப்பா வாறார். டைனமோ போட்டு, சைக்கிள் உழக்கினதிலை, அப்பாவுக்குக் களைப்பு இருக்கு. கடற்கரையில் ஆமிக்காரங்கள் முகத்துக்கு நேரா ரோச்லைற் அடிச்சு, எங்கட நாட்டுக்கு அந்நியரா வந்தவங்க ‘எங்க போட்டு வாறா?’ என்று அரைகுறைத் தமிழில் கேட்கிறாங்கள்.

(தொடரும்...)



பகுதி - 1

அ. இரவி

குறையாது.

ஊத்துப் பக்கம் ஓடிப்போய் கடலுள் கால் வைப்பா. விம்மும் நெஞ்சு தணியும். கோபம் மூண்ட மனசு குளிரும்... ஆனாலும், அழாப்பிகளோடை விளையாட முடியாது. பின்னேரத்துக்கு விளையாடச்சொல்லி உடம்பு திமிறும். அம்மாவின் மனசும் காளி. உடம்பும் காளி.

கடலுள் வைத்த கால் மெதுவாக ஆழ்கடல் நோக்கி நகரும். கழுத்துமுட்டத் தண்ணிவர குபுக்கெனக் கடலைக்குடைவா. பத்து நிமிசமா, பதினைந்து நிமிசமா. நேரம் சொல்லேலாது. நீண்ட தூரத்தில், நடுக்கடலுள் தலை நிமிர்வா. நீச்சல், பிறகு சுழியோட்டம், பிறகு நீச்சல், பிறகு சுழியோட்டம். அந்தக் காளி ஆழ்கடலைத் தன்னுள் அமுக்கி வைத்திருப்பாள். அதுதான் மூத்தண்ணையோ, ஆசையண்ணையோ சின்னண்ணையோ, தியாகண்ணையோ, விசுவண்ணையோ, தம்பி நடராசனோ- நீச்சலில் அம்மாவை வென்றதில்லை. தூரத்திலும் அம்மாதான். வேகத்திலும் அவளேதான். கடலன்னையே அம்மாவிடம் தோற்றுப்போன காலம் அது.

கடலன்னையிடம் அல்ல, காலத்திடம் அம்மா தோற்றுக்கொண்டிருக்கிறா. காலமும் அழாப்பி விளையாடுது. நீதியும், நேர்மையும், உண்மையும் நியாயமும் தோற்றுப் போய்க் கொண்டிருக்கிறது.

அன்பு தோற்காது என்றுதான் அம்மா வலு உறுதியா நம்பினா. அதுவும் தோற்றுப்போகிறது. காலத்திடம் தோற்கப்போகிறாள் என் அம்மா. மனசு புழுங்கிக் கிடந்து தவிக்குது.

## குறுநாவல்

பகலுக்குப் புழுக்கம் தரினும், பின்னேரத்துக்கு சுகமாய்க் கடற்காற்று வீச, அம்மா அக்காவைத் தூக்கி கொண்டு கடற்கரையில் உலாத்தினா. வைரவர் சூலம் கீறின மணலை கடல் அழித்துவிட்டது. நினைவை காலம் அழித்துவிட்டது. நடுக்கடலுள் கால்களாலும், கைகளாலும் நீரை வலித்து வலித்து நின்று, தலை நிமிர்த்தி வள்ளக்காரன்களுடனும், கடலோடிகளுடனும் சம்பாசித்த பொழுதுகளைக் காலம் குடித்துவிட்டது.

பாய்மரக் கப்பல் ஒன்று இப்போ அதே இடத்தை ஊடறுத்துப் போகிறது. சூரியன் படுகிற நேரத்துக்கு அது துயரைக் கசியவிட்டுப் போகிறது. பின்னேரத்துக்குக் கடலில் மேற்குக் கரையில் கருமேகங்கள் சித்திரம் கீறி

ளைக் கேணிக்கு மேலேயும், கடற்கரையிலேயும் மேக்கூறிக் லைட் மின்னத்தொடங்கியது. வாச்சர் சின்னத்துரை அண்ணையும் ரேடியோவை நிப்பாட்டி, அறையைப் பூட்டிவிட்டுப் போனார். இனி ஆமிக்காரங்கள் உலாத்துவாங்கள் என்று அம்மா குண்டி மணலைத் தட்டி வெளிக்கிட்டா.

“சுடச்சுட பகோடா இருக்கு, கட்டிக்கொண்டு போவன் பிள்ளை” என்றார் வேலாயுதண்ணை. நிறைய நாள் பகோடா கட்டியாயிற்று. அது இல்லாதபோது கடலை வடை கட்டியாயிற்று. அதுவும் இல்லாதபோது பிடிக்காது என்றாலும் உழுந்து வடை கட்டியாயிற்று. பின்னேரத் தேத்தண்ணிக்கு ஏதும் கொறிக்கவேண்டும். “சம்பளம் வரேக்கை காசைத்தாவன். இப்ப கொண்டுபோவன்.” என்றார் வேலாயுதம் அண்ணை. முன்னால் வண்டியை நீட்டி, வழுக்கல் மண்டையுடன் கல்லு வைத்து, குந்தியிருந்து, உழுந்துவடை போலிருந்த வேலாயுதம் அண்ணை - எண்ணை தெறிக்கத் தெறிக்கச் சுட்ட பகோடாவை அஞ்சு சதத்திற்கு அம்மா கட்டச் சொன்னா. போப்பரில் எண்ணை ஊற, அஞ்சு சதத்துப் பகோடா ஐம்பது சதத்திற்கு நிறைந்திருந்தது.

அம்மா அப்பிடி மனசு நிறைந்துதான் செய்தா. அதுதான் அப்பிடி ருசியாய் இருந்தது. குமர்ப்பிள்ளையாய் இருந்த அம்மாவின் கொழுத்து வெளுத்த கை - பகோடாவை இதம் பதமாய்ச் சுட்டது.

ஆசையண்ணையின் தேத்தண்ணிக் கடையில் யாவாரம் அமோகமாய் நடந்தது. அம்மா செய்த பகோடாவும், முறுக்கும், கடலை வடையும், பருப்பும் சுடச்சுட வியாபாரம் ஆச்சு. தின்றது மாத்திரமில்லை, எண்ணெய் ஊற பொட்டளி கட்டியும் கொண்டுபோனார்கள். பாவம் போக்கிச் சுகமாய் நீராடக் கீரிமலைக் கேணிக்கும், கடலுக்கும் வண்டில் கட்டி வருபவர்களுக்கு அம்மாவின் பகோடா ருசித்தது. பகோடாவில் பொரிந்த கருவப்பிலையின் மணம் - கடல் உப்பின் மணத்தை அழித்தது. ‘தங்கச்சி எங்கை? கெதியெண்டு கொண்டா. அங்கை ஆக்களல்லே பாத்துக்கொண்ட நிக்கினம்’. ஆசையண்ணை குசினிவாசலில் நிற்பார். ‘இந்தா கொண்டுபோ’ பெட்டி நிறைத்துப் பகோடா குடுப்பா. வேர்த்தொழுகும் அம்மாவுக்கு. கீரிமலையின் கடல் உப்புக் கச்சலுக்கு, அம்மாவின் பகோடாபோல் ருசித்தது வேறு எது?

கடல் உப்புக்கச்சலே வாய் நிறைந்து வழியட்டும் என்று

# நூல் அகம்

## எடுக்கவோ? தொடுக்கவோ?



பொன் கணேசமூர்த்தியின் “எடுக்கவோ? தொடுக்கவோ?” என்ற கவிதை நூலொன்று வெளிவந்துள்ளது.

இந்தக் கவிதைத் தொகுதியில் இடம்பெற்ற கவிதைகள் அநேகம் யுத்த நெருக்குவாரத்துக்கு மத்தியில், போராட்டம் முன் எடுத்துச் செல்லப் பட்டதும், அந்தப் போராட்டத்தினால் ஏற்பட்ட துன்பங்களையும், துயரங்களையும், வெற்றிகளையும் கவிதைகள் மூலம் கவிஞர் வெளிப்படுத்தி உள்ளார்.

ஆரம்பகாலத்தில் நாடகத்துறையில் பரிச்சயமான இவர், குடாநாட்டில் இருந்து வன்னிக்கு இடம் பெயர்ந்த பின்பு, தமது முழுக்கவனத்தையும் கவிதைகள் ஆக்குவதில் செலவிட்டுள்ளார். அதன் பயனாகத்தான் “எடுக்கவோ? தொடுக்கவோ?” என்ற கவிதைத் தொகுதி வெளிவந்துள்ளது.

“ஒரு நெருக்கடியான போர்ச்சூழலில்- வளங்கள் பற்றாக் குறையான காலத்தில் - எத்தனையோ நெருக்கடிகளுக்கும், இடர்பாடுகளுக்கும் மத்தியில் ஒரு தரமான கவிதை நூலை - மிகவும் நேர்த்தியான முறையில் வெளியிட்டிருக்கும் இக்கவிஞரைப் பாராட்டுவதில் நான் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறேன்.” என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் தமது வாழ்த்துரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தொகுதியிலுள்ள ‘அரோஹரா’ என்ற கவிதையில் கசிப்பை உண்டு, வீதியில் அங்குமிங்கும் தள்ளாடிக் கொண்டிருந்தவரை குல மான மது வீதியிலே நாறும் என்று கவிஞர் குறிப்பிடுகிறார்.


பல போராட்ட கவிதைகளைக்கொண்ட இத்தொகுதி ஆழமானவை, அழகானவை, வீரத்தைச் சொல்பவை.

-மகரம்

# கவிதைச் சோலை

## (ஏ) மாற்றிக் கொள்கிறோமோ...?

என்னை தவிர்த்துக் கொள்வதாய்
நீயும்,
உன்னை தவிர்த்துக் கொள்வதாய்
நானும்,
நினைத்து... நினைத்து ...
நெருங்கிக் கொண்டிருக்கின்றோம்
பெண்ணே.....,
என் கவிச்சக்கரங்களை
நானே அறியாமல் -உன்
திசை திருப்பியவள் நீ,
என் பயணக்கடிவாளங்களை
உன் நிழலோடு
நிறுத்தப் பண்ணியவள் நீ,



எனைப் போலவே, நீயும்
தவிர்க்க முயன்றதிலிருந்து
எனை நினைத்துக் கொண்டிருக்கிறாய்
யென்று புரிந்து கொண்டுள்ளேன்,
இருந்தும்...
இவையெல்லாம் அறிந்தும்...,
இன்னும்
எனை தவிர்த்துக் கொள்வதாய்
நீயும்...
உனை தவிர்த்துக் கொள்வதாய்
நானும்.....!

நெற்கொழுதாசன்
வல்வெட்டித்துறை.

## கிழக்கும் மேற்கும்

### மாமன்னன் அரிச்சந்திரன் - இறையன்பன் யோபு



யோபுவின் மக்கள் சுற்றம்
செல்வங்கள் அனைத்தும் விரைவில்
அழிந்திடச் செய்தான் சாத்தான்!
செல்வங்கள் அழியக் க ன்டும்
யோபுவோ கலக்க மின்றி
"இறைவனே அனைத்தும் த
இறைவனே எடுத்தும் கொண்
இறைவனைப் பழித்தல் பாவ
என்றவன் வாழ்த்தி நின்றான்
சபையினை மீண்டும் கூட்டி
கலங்கிடா யோபு பற்றிச்
சபையிலே இறைவன் போற்ற
மனம்பொறுக் காத சாத்தான்
"யோபுவின் நலத்தைப் போக்
நோய்களைக் கொடுப்பீ ராயின்
நோய்களின் துயரால் யோபு
உம்மையே பழிப்பான்" என்றார்!
யோபுவின் உயிருக் கெந்தக்
கெடுதலும் இன்றிக் கொடிய
நோயெலாம் அவனின் உடலை
வருத்துக" என்றார் கடவுள்!
தலைமுதல் இருகால்வரையும்
கொடியதாம் பருக்கள் தந்தும்
அலையெனத் துயர்கள் தந்தும்
வருத்தினான் கொடிய சாத்தான்!
ஓட்டினை எடுத்துத் தனது
பருக்களைச் சுரண்டிக் கொண்டு
வாட்டமே இன்றி யோபு
சாம்பல்மேல் அமர்ந்து கொண்டான்!
யோபுவின் மனைவி மற்றும்
இருநண்பர் எரிபாஸ் பீல்தாத்
யோபுவைத் தினமும் அணுகி
கடவுளைப் பழிக்கும் வண்ணம்
கருத்துடன் தூண்டி நின்றார்!
யோபுவோ இணங்க வில்லை!
கடவுளைப் பழிக்க வில்லை!
இப்படி ஏழு நாட்கள்
கடவுளைப் பழிக்கும் வண்ணம்
அறிவுரை சொல்லித் தோற்றார்.
கடவுளின் மீது யோபு
வாழ்த்துக்கள் பாடக் கண்டு
சினம் கொண்ட மனைவி நண்பர்
தனிமையில் விட்டுச் சென்றார்.
மனத்தினிற் கவலை இன்றித்
தனிமையில் இருந்தான் யோபு!

- முருகு

(தொடரும்..)

## மழை அவிழ...

மழை அதிரும் இரவு...
மௌனத்தைப் போர்க்க விரும்பிய
மனது....
அடைமழையுள்
ஆயுள் தீர்க்கக் கத்தும்
மாரித் தவளைகள்
"உனது ஆயுளும் ஒரு நாள் தீரும்" என...

நீருள் விழுந்த
நிலவின் உடைவுகளென
உள்ளே பளபளக்கும்
உணர்வுகளின் உடைசல்கள்...



சரித்துக் கொட்டிய
குடநீராய்
வாசல் முழுவதும் வெள்ளம்
மனவெளி எங்கும் தான்....

தாட்சாயணி

## எமக்குரியவை எமக்கேதான்!

கண்கள் குளமானபோதும்
மனசு தளரவில்லை.
எமக்குரியவை
எமக்கேதான்.

காத்திருப்புக்கள்
நனவாகும் வரை
உறுதி குலையப் போவதில்லை.

எத்தனையோ பேர்கள் வந்து
பயமுறுத்தினார்கள்.
எமது முயற்சியை
கைவிடுமாறு
கூடக்குரலிட்டார்கள்.
கைவிடுவது சாத்தியமேயில்லை.
எமக்குரியவைகளை
கைவிடச் சொல்வதற்கு
இவர்கள் யார்?
உரிமை
எம் உயிருக்குச் சமம்.



அ. சூரியன்

போராட்டமென்பது
பொழுதுபோக்கல்ல.
நாம் வாழ்வதற்காக
எம்மால் மேற்கொள்ளப்படும்
ஒரு தவம்.
உரிமையை வென்றெடுப்பதற்காக
நடாத்தப்படுகின்ற யாகம்.


'பியர்' அடித்துவிட்டு
முன்னுக்குப் பின்
முரணாகச் சொல்வதற்கு
நாம் அரசியல்வாதிகளல்ல.
ஒருபடி இறங்கினும்
இருபடிகள்
ஏறியே திருவோம்.
காத்திருப்புக்கள் நனவாகும்வரை
உறுதி
குலையப் போவதில்லை.
எமக்குரியவை
எமக்கேதான்.

## A-9 ஐ நீளும் நினைவுகள்

பகுதி நாற்பது

என்ன நடக்குது என்ற தகவல்கள்
**A-9**க்கும் எமக்குந் தெரியலை.
சொன்ன வானொலிச் செய்தியொவ்வொன்றுமே
துயரைக் குழப்பத்தோடு பரப்பின.
"முன்னகர்ந்தனர்", பின்சென்றார் என்றேதோ
முணுமுணுப்புக் கதைகள் உலவவும்
"துன்பம் கிட்ட நெருங்காது".. நேர்த்தியின்
துணையிற் கோயிற் கொடிகளும் ஏறின.

வெள்ளம் கொஞ்சம் கொஞ்சமாய் மண்ணினை
விழுங்கிப் பரவிக் கொள்ளுதல் போலவே
மெள்ள மெள்ளமாய்ப் படைகள .. 'பருத்துறை'
வீதியோடும், பலாலித் தெருவோடும்
உள்ள பரப்பைப் பிடித்துமுன்னேறினர்.
ஒவ்வொரு அடிவைக்கையில்.. ஊரவர்
அள்ளிக்.. கையில் அகப்பட்ட தோடுமே
அகதியாகினர்; அலைந்து மலைத்தனர்.



வழிமறிப்புச் சமர்கள் அடிக்கடி
வளைக்கவும், மூசி முயற்சித்து மோதிடும்
வலிய வீரரின் விசேட அணிகளோ
மரபு ரீதியில் நேர்நின்று மோதவும்
பொழியும் மாரி தொடர்ந்து சொரிதல் போல்,
புயல் தொடர்தல்போல், 'கதிர்கள்' பரவின.
சில தினத்தில் உரும்பிராய், கோப்பாய்க்குச்
சிறிது முன்பாகப் படை அரண் கட்டிற்று.

ஜெயங்கொண்டான்

அன்பார்ந்த வாசகர்களுக்கு,

கடந்த சில மாதங்களாக எனது சுயசரிதை 'பாலையும் சோலையும்' "நமது ஈழநாட்டில்" வெளிவந்ததை வாசித்திருப்பீர்கள்.

விரைவில் நூல்வடிவம் பெறவிருக்கும் 'பாலையும் சோலையும்' நூலில் - எல்லாமாகப் பதினெட்டு அத்தியாயங்கள் உள்ளன. "நமது ஈழநாடு" வெளியிட்டு, நீங்கள் வாசித்தவை நான்கு அத்தியாயங்களே.

எனது ஆரம்பக்கல்வி, ஆசிரியப் பயிற்சி, ஆசிரியரான தொடக்ககால அனுபவம், பல்கலைக்கழக டிப்ளோமாப் பயிற்சி, ஆகியனவே வெளிவந்தன.

இவற்றைத் தகுந்தமுறையில் சிறப்பாக வெளியிட்ட 'நமது ஈழநாடு' ஆசிரியர் பீடத்துக்கு நன்றி கூறும் அதேவேளை, வாசகர்களுக்கும் நன்றி கூறுவது என் கடன். 'பாலையும் சோலையும்' நூல் விரைவில் வெளிவரும் என்ற உறுதியுடன் தற்காலிகமாக உங்களிடமிருந்து விடை பெறுகின்றேன்.

வணக்கம்

கலாநிதி க.சொக்கலிங்கம்
(சொக்கன்)

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

*நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்
உயிர்க்கு இறுதி ஆகிவிடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## சொல்லொன்று செயல் வேறு!

சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதாக ஒருபுறம் தம்பட்டம் அடித்துக்கொள்ளும் அரசாங்கத் தரப்பின் மறுபக்கம் - போராயத்தத்தையும், பதற்றத்தையும் அதிகரிக்கும் இரகசிய நகர்வுகளையும், ஆயுதக் கொள்வனவையும் கொண்டதாகி வருகின்றது.

கடந்த ஒரு சில வாரங்களில், இத்தகைய போக்கின் தீவிரத்தன்மை வெகுவாகவே கொழும்பை மையங் கொண்டு காணப்படுகின்றது.

விடுதலைப் புலிகள் போராயத்தத்தில் ஈடுபடுவதாகக் கூறிக்கொண்டு - ஆயுதப்படைகளுக்கான யுத்த தளபாடங்கள் பற்றாக்குறையாக இருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அறிவித்தது முதலாகவும்,

கொழும்பில் நடைபெற்றுவரும் இரகசியமான பாதுகாப்பு மாநாடுகள், இஸ்ரேலுக்கான பாதுகாப்பு அமைச்சரினதும், கடற்படைத் தளபதியினதும் ஆயுதக்கொள்வனவு விஜயம் வரையதுமாக - அமைதிக்கான குரல் நசுங்குண்டு ஒலிப்பதைத்தான், நாராசமெனக் கேட்க முடிகின்றது.

அமைதிப் பேச்சுக்களைத் தொடர்வதற்கான உருப்படியான, உறுதியான முயற்சிகளில் தயக்கமும், பின்னடிப்பும் காட்டும் அரசாங்கத்தின் செல்வழி - மேற்குறித்த நடவடிக்கைகளின் பின்னணி பற்றிய ஐயப்பாடுகளை இன்னமும் அதிகமாக்கவே செய்கின்றது.

புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படியான - படைச் சமநிலையைக் காப்பதற்கெனக் கூறிக்கொண்டு, படைகளைப் பலப்படுத்த முனையும் அரசாங்கம், அதே புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஏனைய முக்கிய அம்சங்கள் பலவற்றிலும் அலட்சியமாகவும், அசட்டையாகவும் இருப்பது - அரசின் முரண்பாடுகளாலான தோற்றத்தைத்தான் காட்டுகின்றது.

இந்த முரண்பாடுகளின் உண்மையான நிலைப்பாடு - அமைதியை எதிர்பார்த்திருக்கும் மக்களின் நம்பிக்கையில் மண்ணள்ளிப் போட்டுவிடுமோ என்ற அச்சமும் படரத் தொடங்கியிருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையின்படியாகக் கடற்படைத்தரப்பு நடந்து கொள்ளாததுடன் - போராளிகளைச் சீண்டவும், தாக்குதல்களில் ஈடுபடுவதுமாக அது மேற்கொண்டுவருகின்ற அடாவடித்தனமான, அமைதிக்கு உலைவைக்கும் செயல்களைக் கட்டுப்படுத்தத் திராணியற்றிருக்கும் அரசாங்கம்,

கடற்படையின் போரிடும் வலுவை அதிகரிப்பதற்காகவும், ஆழ்கடல்களில் கடற்படை வீச்சுடன் தாக்குதல்களை நடத்தவுமென ஆயுதங்களை வாங்கிக்கொள்ள முயற்சிப்பது - அமைதிக்கான விசுவாசமான செயற்பாடாக இருக்கமுடியாது.

சமாதானத்தைத் தக்கவைப்பதற்கான தகுந்த வழிமுறையாக - போரின் பாதிப்புக்களை நிவர்த்திக்கவும், மக்களைப் போர்ச்சூழலிலிருந்து சுமுக வாழ்வுக்குக் கொண்டுவரவும் - புனர்வாழ்வு, புனரமைப்பைத் துரிதப்படுத்தவும், இராணுவப் பிரசன்னத்தைக் குறைத்து - மக்கள் சுதந்திரமாக வாழ வழிசெய்யவும் என ஆக்கபூர்வமாகச் செய்யவேண்டியவை பலவும் இருக்க -

ஏற்கனவே கடலில் அட்டகாசம் புரிந்து, போரை வலிந்திழுக்குமாப் போன்று திரியும் கடற்படையைப் பலப்படுத்துவோம் என ஒற்றைக்காலில் நிற்பது - அமைதிச்சூழலைத் தக்கவைப்பதற்கு எந்தவகையிலும் உதவாது என்பதை உணர்ந்தும் உணராதது போன்றே ரணில் அரசாங்கம் நடந்து கொள்கின்றது.

அதேவேளை - அண்மைக்காலமாக கொழும்பு உயர்பாதுகாப்பு வட்டாரங்களுள், வெளிநாடுகளின் இராணுவ நிபுணர்களினதும், புலனாய்வு உயரதிகாரிகளினதும் வருகைகளும், கூட்டங்களும் அமர்க்களப்படுவதாகவும் தெரியவருகின்றது.

இந்தவகையில் - இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சின் வெளிநாடுகளுக்கான பிரிவின் தலைவரதும், அவருடன் கூடவே பிரபலமான சிங்கப்பூர் ஆயுத முகவரது கொழும்பு வருகையும்,

அமெரிக்காவின் புலனாய்வுச் சேவையின் உயரதிகாரி ஒருவர், இலங்கையின் வரலாற்றில் என்றைக்கும் நடந்திராத வகையில் - புலனாய்வுச்சேவைகளின் தலைவர்கள் பங்கேற்ற முக்கிய கலந்தாலோசனையொன்றில் பங்கேற்றிருப்பதும்,

- வியப்பையும், சந்தேகங்களைத் தோற்றுவிக்கவும் காரணமாகியிருக்கின்றது.

அமைதி முயற்சிகள் பற்றிப் பேச்சில் சொல்லுமளவுக்குச் செயலில் எதனையும் காட்டாத அரசாங்கத்தின் நேரடி அனுமதியுடன் இவ்வளவும் நடப்பது - ஆரோக்கியமான பாதையில் அரசாங்கம் செல்லுமாப் போலத் தெரியவில்லை என்பதைத்தான் எடுத்துக் காட்டுகின்றது.

# அமெரிக்க ஆயுதக்கொள்வனவு; மிலிந்த, சுபசிங்க முக்கிய பங்கு!

அமெரிக்காவிடமிருந்து கடலோரக் காவற்பணிக்கான 'கரேஜஸ்' கப்பலை இலவசமாகப் பெறுவது உட்பட, அரச படைகளுக்கான, அமெரிக்காவிடமிருந்தான சகல ஆயுதக் கொள்வனவுகளையும் - அமெரிக்காவின் ஜோர்ஜ் புஷ் நிர்வாகத்திற்கு மிக நெருக்கமான அமைச்சர் மிலிந்த மொறகொடவும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் தேவிந்த சுபசிங்கவுமே மேற்கொண்டுள்ளதாக, பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

இதேவேளை - கடந்த ஆண்டு நவம்பர் மாதமளவில், அமெரிக்காவிற்குச் சென்றிருந்த கடற்படை உயரதிகாரிகளான ரியர் அட்மிரல் எல்.டி.தர்மபிரியவும், ரியர் அட்மிரல் வசந்த கரன்னகொடவும் தயாரித்துச் சமர்ப்பித்த மூன்று பக்க அறிக்கையில் -

அமெரிக்காவிடமிருந்து தரமான ஆயுத தளபாடங்களைக் கொள்வனவு செய்யும் அதேவேளை - மொத்த விற்பனை விலைக்கே அவற்றைத் தந்துதவவும், அமெரிக்கா சம்மதித்திருப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

இது இவ்வாறிருக்க - மேற்படி உயரதிகாரிகளின் சிபார்சின்படி - கடற்படைக் கலங்களுக்கு, அமெரிக்கத் தயாரிப்பான 'புஷ் மாஸ்ரர்' என்னும் நவீன துப்பாக்கிகளைக் கொள்வனவு செய்ய பாதுகாப்பு அமைச்சர் தீர்மானித்தபோதும் -

கடற்படைக்குத் தேவையான இவ்வகையான ஆயுதங்கள் 30 வரை தேவைப்படுமிடத்து - 15 புஷ் மாஸ்ரர்களையே உடனடியாகத் தரமுடியுமென அமெரிக்கா கூறியதால், இஸ்ரேலிடமிருந்து மிகுதி ஆயுதங்களைக் கொள்வனவு செய்யும் முடிவுக்கு இலங்கை வந்ததாகவும் -

இது, அமெரிக்காவின் ஆயுத விற்பனைக்கு முகவராகப் பணியாற்றும் உள்ளூரின் முக்கிய புள்ளிக்கு, ஆத்திரத்தை ஏற்படுத்தியிருப்பதாகவும் - பாதுகாப்பு அமைச்சகத்திலிருந்து கசியும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## காணிப் பிரச்சினைகளைத் தீர்க்க விடுதலைப் புலிகள் பூரண ஆதரவு

### அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

வடக்கு - கிழக்கின் காணிகள் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று, காணி அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

தமது இந்த முயற்சிக்கு, விடுதலைப் புலிகள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றமை, சமாதான முயற்சிகளுக்குக் கிடைத்த வெற்றி எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

புத்தளத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற காணிப் பதிவுகள் தொடர்பான இடம்பெயர் சேவையின்போதே, அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதேவேளை - திருகோணமலை மாவட்டத்தில், காணிப் பிரச்சினைகளை இனங்காணும் பொருட்டு தேவையான தகவல்களை மாவட்ட அரசாங்க அதிபருக்கு, விடுதலைப் புலிகள் வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் குறிப்பிட்டார்.

## பரீட்சைகளை நடத்துவதற்கு இனிமேல் புதிய ஆசிரியர்குழாம்!

### கல்வி அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

பாடசாலைப் பரீட்சைகளை நடத்த, ஆசிரியர்கள் குழாம் ஒன்றினை அமைப்பதென்று கல்வித் திணைக்களம் தீர்மானித்துள்ளது. தகைமையுள்ள ஆசிரியர்கள், இந்தக் குழாமில் அங்கம் வகிக்க விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பரீட்சைகளை நடத்துவதற்கான ஆசிரியர்களைத் தெரிவு செய்யும்போது - அரசியல் அச்சுறுத்தல்கள், நீதியீனங்கள் ஆகியன இடம்பெறுவதாகப் பல முறைப்பாடுகள் கிடைத்துள்ளதையடுத்து அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு இத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

ஆசிரியர் குழாமில் இணைந்து கொள்வதற்கான விண்ணப்பங்களை, வலயக் கல்விப் பணிப்பாளர்களூடாக பரீட்சைத் திணைக்களத்திற்கு அனுப்பலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இராணுவத்தால் சுட்டுக்கொல்லப்பட்ட, யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் சோமசுந்தரம் சஞ்சீவனின் மூன்றாம் ஆண்டு நினைவுதினத்தையொட்டி, யாழ்.இந்துக் கல்லூரி பழைய மாணவர்களும், பொதுமக்களும் நேற்று யாழ்.போதனா வைத்தியசாலையில் இரத்ததானம் வழங்கியபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

(படங்கள்: ராஜ்குமார்.)

# திருமலை குரங்குப்பாஞ்சான் பகுதிக்கு கண்காணிப்பாளர் மீண்டும் விஜயம்!

### யாருடைய பகுதியென விரிவாக மதிப்பிடுவார்களாம்

திருகோணமலை - குரங்குப்பாஞ்சான் பகுதிக்கு மீண்டும் தமது பிரதிநிதிகளை அனுப்பி, நிலைமையை முற்றாக அறிந்து கொள்ளப்போவதாக, இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அறிவித்திருக்கிறது.

குரங்குப்பாஞ்சான் பகுதியில் - விடுதலைப் புலிகள் புதிய முகாமொன்றை அமைத்து வருவது தொடர்பாக, இராணுவத்தினர் தெரிவித்திருக்கின்ற குற்றச்சாட்டுக்களை விடுதலைப் புலிகள் நிராகரித்திருப்பதைத் தொடர்ந்தும்,

அந்தப் பகுதி தமது கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் பகுதி என விடுதலைப் புலிகள் தெரிவித்திருப்பதையடுத்தும் - போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு முழுமையாக இந்த விடயத்தைப் பற்றி அறிந்து கொள்வதற்காக மீண்டுமொரு நேரடி விஜயத்தை மேற்கொள்ளவிருப்பதாக கண்காணிப்புக் குழுவின் பிரதித் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் தெரிவித்திருக்கிறார்.

அரசபடைகள், குரங்குப்பாஞ்சான் பகுதி தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகக்கூறும் அதேவேளை - புலிகள் அப்பகுதியை தமது கட்டுப்பாட்டில் இருப்பதாகக் கூறுவதால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைத் தீர்க்குமுகமாகவே நேரடியாக அப்பகுதிகளுக்கு கண்காணிப்புக்குழு அதிகாரிகளை அனுப்பி, தெளிவான நிலைப்பாட்டை அறிந்துகொள்ளவிருப்பதாக ஹக்ரப் ஹொக்லண்ட் மேலும் தெரிவித்திருக்கிறார்.

குரங்குப்பாஞ்சான் பகுதிக்குச் செல்லும் கண்காணிப்புக் குழு அதிகாரிகள் - அப்பகுதி யாருடைய கட்டுப்பாட்டின் கீழ் வருகிறது என்பதை அறிந்து கொள்வதற்கான விரிவான மதிப்பீட்டை மேற்கொள்வார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இனந்தெரியாதோர் தாக்கியதில் கம்பர்மலையில் ஒருவர் காயம்

மோட்டார் சைக்கிளில் சென்ற ஒருவர், இனந்தெரியாத நபர்களால் கம்பர்மலையில் வைத்து தாக்கப்பட்டார்.

கடந்த புதன்கிழமை இரவு 9.30 மணியளவில் கம்பர்மலை - பாரதி வீதியில் வைத்து மு.அகிலன் என்பவரே இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டார்.

தலையில் படுகாயமம் இடைந்த இவர், மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். இச்சம்பவத்துடன் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்பட்ட இருவரை, வல்வெட்டித்துறை பொலிஸார் கைதுசெய்து, நேற்றுமுன்தினம் பருத்தித்துறை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். (124)

## இலங்கைக்கு பயங்கரவாதம் இந்தியாவிலிருந்தே ஏற்றுமதி

### பாகிஸ்தான் குற்றச்சாட்டு

இலங்கைக்கு, இந்தியாவே பயங்கரவாதத்தை ஏற்றுமதி செய்கிறது என, பாகிஸ்தான் வெளியுறவு செயலாளர் ரியாஸ் எச்.கோஹர் நேற்று குற்றஞ்சாட்டியுள்ளார்.

பாகிஸ்தான் பயங்கரவாதத்தை உலகிற்கு பொதிசெய்து அனுப்புவதாக புதுடெல்கி குற்றஞ்சாட்டியது தொடர்பாக செய்தியாளர்களிடம் பேசியபோதே பாகிஸ்தான் அதிகாரி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

# தென்னிலங்கை அரசியலில் புரட்சிகர மாற்றம் ஏற்பட்டால் ஒழிய பிரச்சினைக்குத் தீர்வில்லை

"தித்திக்கும் பழம் தின்னக் கொடுப்பார்
மதுரப் பருப்பு வழங்குவார் உனக்குப்
பொன்னே, மணியே, என்றுனைப் புகழ்வார்
ஆயினும் பச்சைக் கிளியே அதோபார்!
உன்னுடன் பிறந்த சின்ன அக்கா
வான வீதியில் வந்து திரிந்து
தென்னங் கீற்றுப் பொன்னூஞ்சல் ஆடிச்
சோலை பயின்று சாலையில் மேய்ந்து
வாழும் மண்ணுந்தன் வசத்திற் கொண்டாள்!
தச்சன் கூடுதான் உனக்குச் சதமோ?
அக்கா அக்கா என்று நீ அழைத்தாய்
அக்கா வந்து கொடுக்கச்
சுக்கா மிளகா சுதந்திரம் கிளியே"
(பாவேந்தர் பாரதிதாசன்)

கூண்டுக்கிளி - சோலைக் கிளியைப் பார்த்து "அக்கா அக்கா எனக்குச் சுதந்திரம் வேண்டும்" என்று கத்திக்கேட்டது. அதற்குச் சோலைக்கிளி - கூண்டுக்கிளியைப் பார்த்துப் பதில் இறுத்தது- "அக்கா அக்கா என்று நீ அழைத்தால், அக்கா வந்து கொடுக்கச் சுக்கா மிளகா. சுதந்திரம் கிளியே?"

பாவேந்தர் பாரதிதாசன் சுதந்திரத்தின் அருமை பெருமையை இந்தக் கவிதை வரி



களின் மூலம் எடுத்துச் சொல்கிறார். சுதந்திரம் என்பது சும்மா கிடைக்காது. அதற்கென ஒரு விலை இருக்கிறது. அந்த விலையைக் கொடுத்தவன் மட்டுமே விடுதலை கிடைக்கும்.

இந்த உண்மையைத் தமிழ் பேசும் மக்கள் பட்டறிவு மூலம் படித்துத் தெரிந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள், தங்கள் விடுதலைக்குக் கொடுத்த விலை மிக அதிகம். இதுவரை மொத்தம் 17,656 போராளிகள் தங்கள் இனிய, இளைய உயிர்களை விடுதலைக்கான வேள்வித் தீயில் பலிகொடுத்துள்ளார்கள். சுமார் 64,000 பொதுமக்கள் விடுதலைக்கான போரில் இறந்துள்ளார்கள்.

இராம - இராவண யுத்தம் 18 மாதங்கள் நீடித்தது. பஞ்சபாண்டவர்கள் - துரியோதனர் யுத்தம் 18 நாட்கள் நடைபெற்றது. ஆனால், தமிழீழத் தமிழர் - சிங்களவர் போர் பதினெட்டு ஆண்டுகளுக்கு மேலாக நடந்து வருகிறது.

கடந்த 2002 பெப்ரவரி 22 இல் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் ஒரு போர்நிறுத்த ஒப்பந்தம் செய்துகொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து கடந்த 15 மாதங்களாகத் துப்பாக்கிகளின் சத்தம் ஓய்ந்திருக்கிறது. ஆகாயத்திலிருந்து குண்டு மழை பொழிவது நிறுத்தப்பட்டுள்ளது. உயிரிழப்புக்கள் தவிர்க்கப்பட்டுள்ளன. சிங்கள இராணுவத்தின் தேடுதல் வேட்டை, சுற்றிவளைப்பு, சித்திரவதை, சிறையடைப்பு குறைந்துள்ளது. மக்கள் கொஞ்சம் நிம்மதிப் பெருமூச்சு விடக்கூடியதாக உள்ளது.

ஆனால், தமிழ் மக்கள் விரும்பும் அமைதி வாழ்க்கை, இயல்பு வாழ்க்கை இன்னும் எட்டாத கனியாகவே இருக்கிறது. போர் நிறுத்தத்தினால் ஏற்பட்ட அமைதியின் முழுப்பயனை அவர்கள் அனுபவிக்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அமைதி என்பது போர் இல்லை என்பதல்ல, வருவது போர் அல்ல (**Peace is not merely the absence of war**). போருக்கு நிரந்தரமாக விடை கொடுக்கப்பட்டு, மக்கள் மனதில், அன்றாட வாழ்வில் சுதந்திரம், பாதுகாப்பு மூலம் இயற்கையாக ஏற்படும் மனநிறைவே உண்மையான அமைதியாகும்.

நோர்வே நாட்டின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா அரசுக்கும் இடையில் ஆறு சுற்று அமைதிப் பேச்சுவார்த்தைகள் தாய்லாந்து, நோர்வே, ஜப்பான், ஜேர்மனி போன்ற நாடுகளில் நடந்து முடிந்துள்ளன.

ஆனால், இந்த அமைதிப் பேச்சுவார்த்தைகளின்போது எடுக்கப்பட்ட முடிவுகள் ஏட்டுச் சுரைக்காயாகவே இருந்து வருகின்றன. முடிவுகளை அமுல்படுத்த உருவாக்கப்பட்ட உபகுழுக்கள் - போதிய சட்டவலு இல்லாத காரணத்தால் செயல் இழந்துவிட்டன.

உபகுழுக்களின் செயலின்மையைக் காரணம் காட்டி, விடுதலைப் புலிகள் அமைதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதைக் கடந்த ஏப்ரல் மாதம் முதல் தற்காலிகமாக இடைநிறுத்தம் செய்தார்கள்.

'வட - கிழக்கின் மீள்கட்டமைப்பு, மறுவாழ்வு இரண்டையும் துரிதகதியில் கையாளக்கூடிய பலம்வாய்ந்த ஒரு இடைக்கால அரசியல் - நிர்வாக அமைப்பு அரசியல் யாப்புக்கு வெளியே உருவாக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை விடுதலைப் புலிகள் முன்வைத்தார்கள்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எந்த அமைப்பென்றாலும் அது அரசியல் யாப்புக்கு உட்பட்டதாகவே இருக்கவேண்டும் எனக் கூறி, வட-கிழக்குக்கு மீள் கட்டமைப்பு மறுவாழ்விற்குப் பொறுப்பாக மூன்று உபகுழுக்களை உருவாக்கும் யோசனையை முன்வைத்தார். இதனை விடுதலைப் புலிகள் நிராகரித்து விட்டார்கள்.

புலிகள் - அரசியல் யாப்புக்கு அப்பாற்பட்ட ஒரு இடைக்கால நிர்வாகசபை வேண்டும் என்கிறார்கள். அதெல்லாம் முடியாது. அரசியல் யாப்புக்கு உட்பட்ட அமைப்பு ஒன்றைத்தான் அரசினால் உருவாக்கமுடியும் என, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கையை விரிக்கிறார்.

இந்த நிலையில், ஜப்பானில் கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி நடந்த இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாட்டை புலிகள் புறக்கணித்தார்கள்.

அந்த மாநாட்டில் புலிகளை எப்படியும் கலந்துகொள்ள வைக்க - ஜப்பான், நோர்வே, அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் ஆகியன எடுத்த முயற்சிகள் வெற்றிபெறவில்லை.

தமிழர்களது தாயக பூமியான தமிழீழம்- இன்று ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாகக் காட்சியளிக்கிறது.

தமிழர்களது பாரம்பரிய பூமியான யாழ்ப்பாணக் குடாநாட்டை 40 ஆயிரம் சிங்கள இராணுவத்தினர் ஆக்கிரமித்து நிற்கின்றனர். மொத்த நிலப்பரப்பில் (999 சதுர மைல் அல்லது 2,587 ச.கி.மீ.) 144.15 ச.கி.மீ. நிலப்பரப்பைச் சிங்கள இராணுவம் அதியுயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது.

போர்நிறுத்த ஒப்பந்தத்தின்படி - இராணுவம் 160 நாட்களில் தமிழ் மக்களது வீடுகள், வழிபாட்டுத் தலங்கள், பள்ளிக்கூடங்கள் மருத்துவமனைகள் மற்றும் பொதுக் கட்டடங்களில் இருந்து வெளியேறி இருக்கவேண்டும். ஆனால், இராணுவம் அப்படிச் செய்யவில்லை. பாதுகாப்பைக் காரணங்காட்டி, அதியுயர் பாதுகாப்புப் பகுதிகளிலிருந்து வெளியேற இராணுவம் விடாப்பிடியாக மறுத்துவருகிறது.

இந்த உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் 25,525 வீடுகள், 300 பள்ளிக்கூடங்கள், 275 வழிபாட்டுத் தலங்கள், 25 முக்கிய சாலைகள் அகப்பட்டுள்ளன.

இதனால், இந்த நிலப்பரப்பில் வாழ்ந்த 30,388 குடும்பங்களில் 67 கிராம சேவகர் பகுதிகளைச் சேர்ந்த 24,178 குடும்பங்கள் தங்கள் சொந்த வீடு வாசல்களில் மீள் குடியேற முடியாமல் இருக்கின்றன. அந்தக் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்து 30 ஆயிரம் மக்கள் அகதி முகாம்களிலும், நலன்புரி நிலையங்களிலும், உறவினர் வீடுகளிலும் வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள்.

யாழ்ப்பாணக் குடாநாட்டின் பொருளாதாரத்தின் முதுகெலும்பு - தோட்டச் செய்கையும், மீன்பிடித் தொழிலுமாகும். ஆனால், மொத்தம் 16,000 குடும்பங்கள் 42,260 ஏக்கர் தோட்ட நிலத்தில் தோட்டச் செய்கை செய்ய முடியாமல் இருக்கின்றன. இதுபோலவே 81.5 கி.மீ. நீளக் கடலோரத்தில் 4,500 மீனவக் குடும்பங்கள் மீள்குடியமரமுடியாமலும், சுதந்திரமாகத் தொழில் செய்ய முடியாமலும் இருக்கின்றன.

கிழக்கு மாகாணத்திலுள்ள நூற்றுக் கணக்கான கிராமங்கள் போரினால் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. இதனால், அம்பாறை மாவட்டத்தில் 11,141 குடும்பங்கள், மட்டக்களப்பு மாவட்டத்தில் 7,759 குடும்பங்கள், திருகோணமலை மாவட்டத்தில் 5,759 குடும்பங்கள் அகதி முகாம்களில் முடங்கிக் கிடக்கின்றன.

பொதுவாகக் கூறுமிடத்து - பொது மக்களது பாதுகாப்பை உறுதிசெய்வதே ஒரு அரசின் தலையாய கடமையாகக் கருதப்படுகிறது. ஆனால், தமிழர் பகுதிகளில் இதற்கு நேர்மாறாக அல்லது தலைகீழாக அரசு தனது இராணுவத்துக்குப் பாதுகாப்பு வழங்குவதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் ஒரு நிலையைப் பார்க்கலாம்!

யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டுமல்ல, தமிழீழத்தின் ஏனைய பகுதிகளில் வாழும் தமிழ் மக்கள் ஏழ்மையிலும், வறுமையிலும், பிணியிலும் வாடுகிறார்கள்.

போரினால் தமிழீழத்தின் கட்டுமானங்கள் (**Infra-structure**) முற்றுமுழுதாகச் சிதைக்கப்பட்டுள்ளன. சமூக வாழ்வு, பொருளாதாரம் சீரழிக்கப்பட்டுள்ளன. வீடு வாசல்கள், தோட்டம் துரவுகள், வழிபாட்டுத் தலங்கள், பள்ளிக்கூடங்கள், மருத்துவமனைகள், பொதுக் கட்டடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

போரினால் 23 ஆயிரம் குடும்பத் தலைவிகள் தங்கள் துணைவர்களை இழந்து விதவைகள் ஆக்கப்பட்டுள்ளார்கள். போரினால் ஆயிரக்கணக்கான பிள்ளைகள் - தங்கள் தந்தை அல்லது தாய் அல்லது இரண்டு பேரையுமே இழந்து "அநாதைகள்" ஆக்கப்பட்டுள்ளார்கள். போர்க்காலத்தில் 20 ஆயிரம் மக்கள் காணாமல் போயுள்ளார்கள்.

அண்மையில் கொழும்பிலிருந்து வெளியாகும் **The Sunday Leader** (மே 23, 2003) வாரஏட்டின் பத்திரிகையாளர் **Frederica Jansz** என்பவர் - வன்னி நிலப்பரப்புக்குச் சென்று அங்கு நேரில் மக்கள்படும் அல்லல்களையும், அவலங்களையும், அனர்த்தங்களையும் படம் பிடித்து ஒரு கட்டுரை எழுதியுள்ளார். அந்தக் கட்டுரையில் காணப்பட்ட சில முக்கிய தரவுகள் -

❖தென்னிலங்கை - இப்போது நடைபெறும் அமைதிப் பேச்சுவார்த்தையின் விளைவாகப் பலனுள்ள பொருளாதார நலங்களை அறுவடை செய்துள்ளது. வெளிநாட்டு மூலதனம், சுற்றுலா வருகை அதிகரிப்பு, கட்டுமான மேம்பாடு போன்றவற்றைத் தெற்கு அனுபவிக்கும் போது, வன்னியில் அமைதிப் பேச்சுவார்த்தைகளின் பலன்கள் தூரத்து வானவில் போல் இருக்கிறது.

❖வன்னியில் வளமான, ஆயிரக்கணக்கான ஹெக்ரயர் விவசாய பூமி - கண்ணிவெடிகளாலும், வெடிபொருட்களாலும் நிறைந்து கிடப்பதால், அதில் முழுதாக விவசாயம் செயயமுடியாமல் இருக்கிறது.



'பொங்கு தமிழ்' வெளிப்படுத்திய மக்கள் எழுச்சி.

❖கிளிநொச்சி மாவட்டத்தில் மனிதவளம், அலுவலக இட வசதி, போக்குவரத்து வசதிப் பற்றாக்குறை நிலவுகிறது. அலுவலகங்கள் தற்காலிக கட்டடங்களில் இயங்குகின்றன.

❖கிளிநொச்சியில் ஒரு மருத்துவமனை கூடக் கிடையாது. இருந்த மருத்துவமனை போரில் அழிக்கப்பட்டுவிட்டது. கிளிநொச்சிக்கு மேற்கே 15 கற்கள் தூரத்தில்தான் ஒரு மருத்துவமனை இயங்குகிறது.

❖நூற்றுக்கணக்கான மாணவர்கள், ஓலைக் கொட்டில்களில் அல்லது 20 ஆண்டு காலப் போரில் குண்டு வீச்சில் சிதைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடங்களில் படிக்கிறார்கள்.

❖தற்சமயம் 84 பாடசாலைகள் வன்னியில் இயங்குகின்றன. இவற்றில் சில போரில் இடம் பெயர்ந்து போனபின் பழைய இடத்துக்குப் போகமுடியாமல் இருக்கின்றன. 750 ஆசிரியர்களது இடம் நிரப்பப்படாமல் வெறுமையாக இருக்கின்றன.

❖வன்னியில் 32 ஆயிரம் குடும்பங்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றன. அதாவது, அந்தக் குடும்பங்களின் மாத வருமானம் ரூபா 1,500 இற்கும் (15 அமெரிக்க டொலர்கள்) குறைவானது.

❖வன்னியில் 800 மில்லியன் ரூபா செலவில் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியோடு இடம்பெறும் ஒரேயொரு மேம்பாட்டுத் திட்டம் ஏ - 9 நெடுஞ்சாலை திருத்த வேலையாகும். ஆனால், இதில் வேலை செய்வதற்கு முற்றாக "வெளியார்" கொண்டுவரப்பட்டுள்ளதால், வன்னி மக்களுக்குக் கிடைக்கவேண்டிய வேலைவாய்ப்பு இல்லாது போய்விட்டது.

❖ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்கள் கடந்த 15 மாதங்களாக "தேவைப் பட்டியல் அறிக்கைகள்" (**Needs Assessment**) தயாரிப்பதில்தான் தங்கள் நேரத்தைச் செலவிடுகிறார்கள். ஆனால், உருப்படியாக ஒன்றுமே நடைபெறவில்லை. அவர்களது நேர்மை பற்றிப் புலிகளுக்குச் சிறிதளவு நம்பிக்கைகூட இல்லாமல் இருக்கிறது.

❖மொத்தம் 30 ஆயிரம் ஹெக்ரயர் விவசாய நிலத்தில் - 12 ஆயிரம் ஹெக்ரயர் நிலத்தில் எந்தவித விவசாயமும் இடம்பெறவில்லை.

❖வன்னியில் 7 ஆயிரம் மீனவக் குடும்பங்கள் வறுமையில் வாழ்கின்றன. அவர்கள் வாய்க்கும், வயிற்றுக்குமான வாழ்க்கையை நடாத்துகிறார்கள்.

❖வட- கிழக்கு மாகாணசபை - அபிவிருத்திக்கு ஒதுக்கும் பணம் முழுதும் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்குத் திசை திருப்பப்படுகிறது. அம்பாறை மாவட்டம் சிங்களவர், முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் மாவட்டமாகும்.

❖வன்னியில் இடம்பெயர்ந்த 16,572 குடும்பங்கள் மீள்குடியேற்றப்பட்டுள்ளன. இன்னும் 4,657 குடும்பங்கள் மீள்குடியேற்றப்படாமல் இருக்கின்றன.

❖வன்னியில் வாழும் மக்களின் வீடுகளை 'வீடு' என்றே அழைக்கமுடியாது. ஆகக்கூடி 5 அடி உயரமுள்ள இந்த வீடுகள் - நாய்க் கூடுகள் அல்லது விளையாட்டு வீடுகள் மாதிரி இருக்கின்றன.

"அரசியல் எப்படி இருப்பினும், வன்னி மக்கள் அமைதிப் பேச்சுவார்த்தையின் பயன் முற்றிலும் மறுக்கப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களது நிலைமையையிட்டு புலிகள் - பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்குச் செய்த முறைப்பாடு முற்றிலும் நியாயமானவையே" எனக்கூறித் தனது கட்டுரையை **Frederica Janzs** நிறைவு செய்கிறார்.

புலிகள் - தமிழ்மக்கள் சார்பாக ரணில் விக்கிரமசிங்கவிடம், தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளை வழங்குமாறுதான் கேட்கிறார்கள். அவர்களும் ஏனைய பெரும்பான்மை மக்களைப்போல் இயல்பு வாழ்க்கை வாழவேண்டும் எனக் கேட்கிறார்கள்.

தமிழ்மக்கள் தங்களது சொந்த மண்ணில், சொந்தக் கடலில், சொந்த வீடுகளில், சொந்த வரப்புகளில், சொந்தத் துரவுகளில் - இராணுவ கெடுபிடிகள், நெருக்கடிகள், நெருக்குவாரங்கள், அழுத்தங்கள், பயமுறுத்தல்கள் இன்றி, கூழோ, கஞ்சியோ குடித்தாலும்- தன்மானத்தோடு, தலைநிமிர்ந்து, சுதந்திரமாகவும், பாதுகாப்பாகவும் வாழ்வதையே விரும்புகிறார்கள். தங்கள் மண்ணில் தங்களைத் தாங்களே ஆள விரும்புகிறார்கள். இவை அவர்களது அடிப்படை மனித உரிமையாகும்.

போரினால் சிதைக்கப்பட்ட, அழிக்கப்பட்ட தமிழர் தாயகத்தை மீள்கட்டமைக்கவும், தமிழ மக்களது வாழ்வில் இயல்புநிலையைத் தோற்றுவிக்கவும் வட - கிழக்குக்கு அரசியல் நிர்வாக அதிகாரம் படைத்த இடைக்கால நிர்வாகசபை உருவாக்கப்பட வேண்டும் எனப் புலிகள் கேட்கிறார்கள்.


**கனடாவிலிருந்து நக்கீரன்**

அதனைக் கொடுப்பதற்கே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆயத்தம் இல்லை என்றால், மனம் இல்லை என்றால் ஒன்றுபட்ட இலங்கையில் தமிழ் மக்களுக்கு இணைப்பாட்சி அரசியல் யாப்பின் கீழ் சுயாட்சி எப்படிக் கிடைக்கப்போகிறது? எப்போது கிடைக்கப் போகிறது?

தென் இலங்கை அரசியலில் புரட்சிகரமான சிந்தனை, புதுமையான மாற்றங்கள், புதிய வழிமுறைகள் ஏற்பட்டாலொழிய, இனச் சிக்கலுக்கு அரசியல் தீர்வு காண்பது சாத்தியம் இல்லை. ♦



வடக்கு - கிழக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டியின் இறுதிநாள் நிகழ்வில் கலந்துகொண்ட பிரமுகர்கள்.





நேற்று நடைபெற்ற இறுதிப் போட்டிகளில் சில காட்சிகள்....



சுவட்டு நிகழ்ச்சிகளில், முதலாம் இடத்தினைப் பெற்ற யாழ். மாவட்ட அணிக்கு - யாழ்.அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் வெற்றிக்கிண்ணத்தை வழங்குவதைப் படத்தில் காணலாம்.



வடக்கு - கிழக்கு மாகாண விளையாட்டுப் போட்டியில், தடகள போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்ற யாழ்.மாவட்ட அணிக்கு - யாழ்.மாவட்ட அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் வழங்குகின்றார்.

(படங்கள்: தே.லிவிங்ஸ்டன்)

# வடக்கு - கிழக்கு மாகாண தடகள விளையாட்டு: முதல் மூன்று இடங்களைப் பெற்றோர் விவரம்!

யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில், நேற்றுமுன் தினமும், நேற்றும் நடைபெற்ற வடக்கு -கிழக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றி முதல் மூன்று இடங்களையும் பெற்ற வீர, வீராங்கனைகளின் விபரங்கள் வருமாறு-

## ஆண்கள் நிகழ்ச்சிகள்

**01. நீளம் பாய்தல் -**
ஆர்.ரதீசன் (திருமலை),
கே.பிரதீபராஜா (மட்டக்களப்பு),
வி.சுஜந்தன் (திருமலை).

**02. ஈட்டி எறிதல் -**
ஜி.கே.ஜானக நிஷாந்த (திருமலை),
ஆர்.கே.சுஜித் (திருமலை),
ஏ.எச்.சுக்ரி (திருமலை).

**03. 200 M -**
ஜே.நிரஞ்சன் (திருமலை),
எஸ்.ரமணன் (மட்டக்களப்பு),
ஏ.நவ்ஷாட் (அம்பாறை).

**04. தடைதாண்டல் 110 M -**
எஸ்.ரஞ்சித்குமார் (யாழ்ப்பாணம்),
ஏ.கமலகிறேசன் (யாழ்ப்பாணம்),
ஏ.எஸ்.மஸாஸ்மின் (திருமலை).

**05. குண்டெறிதல் -**
எம்.பிரதீப்குமார் (யாழ்ப்பாணம்),
இ.உதயகுமார் (யாழ்ப்பாணம்),
எஸ்.ரிஷாத் (திருமலை).

**06. 400 M -**
எஸ்.பிரசன்னா (திருமலை),
டி.எஸ்.பி.உடுகும்புர (அம்பாறை),
எஸ்.டி.எஸ்.துஷாந்த (திருமலை).

**07. உயரம் பாய்தல் -**
எஸ்.கமலமோகன் (யாழ்),
என்.கிஷோர்குமார் (யாழ்),
டி.ஜி.அருணலங்கா (திருமலை).

**08. 5,000 M -**
பி.ஜி.பிரேம் விமலசேன (அம்பாறை),
டபிள்யூ. ஏ.எஸ்.ரணசிங்க (அம்பாறை),
கே.குமாரன் (மன்னார்).

**09. 10,000 M -**
டபிள்யூ.ஏ.எஸ்.ரணசிங்க (அம்பாறை),
என்.ஆர்.வீரசேகர (அம்பாறை),
ஆர்.சில்வெஸ்ரர் (மட்டக்களப்பு).

**10. பரிதிவட்டம் வீசுதல் -**
இ.உதயகுமார் (யாழ்),
ஆர்.ரதீசன் (திருமலை),
எம்.சலீம் (அம்பாறை).

**11. முப்பாய்ச்சல் -**
எஸ்.ரஞ்சித்குமார் (யாழ்),
பி. ஜுலியட் சிரியஸ் (மன்னார்),
வி.சுஜந்தன் (திருமலை).

**12. 800 M -**
கே.ஜி.எஸ்.பிரசன்னா (அம்பாறை),
எஸ்.டீ.எஸ்.துஷாந்த (திருமலை),
எஸ்.பிரசன்னா (திருமலை).

**13. 400 M தடைதாண்டல் -**
எஸ்.சுரேஷ்குமார் (யாழ்),
எஸ்.நிக்லஸ் மீயாஸ் (மன்னார்),
பி.கிருபானந்தன் (யாழ்).

**14. கோலூன்றிப் பாய்தல் -**
ஆர்.ரதீசன் (திருமலை),
எஸ்.குமரகேசன் (வவுனியா),
எஸ்.விஜயகுமார் (யாழ்).

**15. 100 M -**
என்.நிரஞ்சன் (யாழ்),
எஸ்.ரமணன் (மட்டக்களப்பு),
ஏ.நவ்ஷாட் (அம்பாறை).

**16. 4 X 400 அஞ்சலோட்டம் -**
திருமலை, யாழ்ப்பாணம், அம்பாறை

**17. 4 X 400 அஞ்சலோட்டம் -**
திருமலை, அம்பாறை, யாழ்ப்பாணம்.

## மகளிர் நிகழ்ச்சிகள்

**01. உயரம் பாய்தல் -**
எஸ்.சிவசெந்தி (முல்லைத்தீவு),
எஸ்.சுமாஜினி (யாழ்ப்பாணம்),
ஏ.என்.ஹசாந்தி (அம்பாறை).

**02. குண்டெறிதல் -**
எஸ்.தாரணி (கிளிநொச்சி),
ரி.கார்த்திகா (யாழ்ப்பாணம்),
ஏ.ஜே.இஸ்மத்பானு (திருமலை).

**03. 200 M -**
கே.மிதிலா (யாழ்),
டபிள்யூ.ஏ.ஏ.சித்ராணி (அம்பாறை),
எம்.மொஷாந்தி (வவுனியா).

**04. 100 M தடைதாண்டல் -**
பி.ஜெயசுஹாளினி (திருமலை),
எஸ்.குகாஜினி (யாழ்ப்பாணம்),
வி.டி.எம்.சுமதிபால (அம்பாறை).

**05. ஈட்டிஎறிதல் -**
கே.மனோரூபி (திருமலை),
கே.சேதுபிரியா (யாழ்);
எஸ்.ஜெயகுமாரி (கிளிநொச்சி).

**06. நீளம் பாய்தல் -**
கே.மிதிலா (யாழ்),
சி.குகாஜினி (யாழ்),
பி.ஜி.ஏ.அசந்தாணி (அம்பாறை).

**07. 400 M -**
கே.மிதிலா (யாழ்),
ஏ.ஏ.டபிள்யூ.மதுபாஷினி (திருமலை),
எஸ்.நிரோஷினி (திருமலை).

**08. 5000 M -**
எஸ்.சிவரஞ்சினி (யாழ்),
எஸ்.சந்தாணி (அம்பாறை),
என்.மேர்சி (யாழ்).

**09. 10,000 M -**
எஸ்.சிவரஞ்சினி (யாழ்),
எஸ்.சத்தியலோஜினி (வவுனியா),
என்.மேர்சி (யாழ்).

**10. 800 M -**
ஏ.ஏ.என்.மதுபாஷினி (திருமலை),
பி.ரி.ஜி.எஸ்.பத்மகுமாரி (அம்பாறை),
ஏ.எப்.சுதர்சினி (முல்லைத்தீவு).

**11. பரிதிவட்டம் வீசுதல் -**
கே.தாரணி (கிளிநொச்சி),
ஏ.ஜே.இஸ்மத்பானு (திருமலை),
ரி.ஜெயராணி (முல்லைத்தீவு).

**12. 400 M தடைதாண்டல் -**
எஸ்.வாசுகி (யாழ்),
எஸ்.புருமினா (முல்லைத்தீவு),
ரி.வாசுகி (யாழ்ப்பாணம்).

**13. 100 M -**
டபிள்யூ.ஏ.ஏ.சித்ராணி (அம்பாறை),
எம்.மொஷாந்தி (வவுனியா),
ஜே.சிறிவித்யா (யாழ்).

**14. முப்பாய்ச்சல் -**
எஸ்.குகாஜினி (யாழ்),
ரி.வாசுகி (யாழ்),

**15. 4 X 100 M அஞ்சலோட்டம் -**
யாழ்ப்பாணம், அம்பாறை, திருமலை

**16. 4 X 100 M அஞ்சலோட்டம் -**
திருமலை, வவுனியா, அம்பாறை

# மாகாண மட்ட தடகளப் போட்டிகளில் 7 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன

## யாழ்.மாவட்ட வீரர்கள் முன்னணியில்

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வடக்கு - கிழக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டியில் - மாகாண மட்டத்தில் 7 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டுள்ளன.

இதன்படி -

குண்டெறிதல் ஆண்கள் பிரிவில், யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ம்.பிரதீப்குமார் 12.96 மீற்றர் தூரத்துக்கு குண்டினையெறிந்து, புதிய மாகாண மட்டச் சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதற்கு முன்னர் - 2001 ஆம் ஆண்டில், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ஆதவன், 12.20 மீற்றர் தூரத்துக்கு குண்டினையெறிந்து சாதனையை நிலைநாட்டியிருந்தார்.

உயரம் பாய்தல் ஆண்கள் பிரிவில் - யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.கமலமோகன், 1.94 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து, புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதற்கு முன்னர் - 1999 ஆம் ஆண்டில், திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த ஜி.அருணலங்கா, 1.91 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து நிலைநாட்டியிருந்த சாதனையை, இவர் முறியடித்திருக்கிறார்.

ஆண்கள் பிரிவில், 800 மீற்றர் ஓட்டத்தில், 1998 ஆம் ஆண்டு, அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த எஸ். பிரசன்னா 1.58 நிமிடங்களில் ஓடி முடித்து நிலைநாட்டிய சாதனையை, அவரே முறியடித்து, 1.54 நிமிடங்களில் குறிப்பிட்ட தூரத்தை ஓடிக் கடந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

தட்டெறிதல் பெண்கள் பிரிவில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த கே.தாரணி, 26.31 மீற்றர் தூரத்துக்கு தட்டினை எறிந்து, புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதற்கு முன்னர் - 2001 ஆம் ஆண்டில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆர்.உதயகுமாரி நிலைநாட்டியிருந்த சாதனையை இவர் முறியடித்தார்.

ஆண்கள் பிரிவில் - 400 மீற்றர் தடைதாண்டலில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.சுரேஷ், 57.07 செக்கனில், குறிப்பிட்ட தூரத்தை ஓடிக் கடந்து புதிய சாதனையை நிலைநாட்டினார்.

இதற்குமுன்னர் - 2001 ஆம் ஆண்டில், வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த என்.அலுத்வல, 58.8 செக்கனில் ஓடிக்கடந்து சாதனை நிலைநாட்டியிருந்தார்.

கோலூன்றிப் பாய்தலில் - திருகோணமலையைச் சேர்ந்த ஆர்.ரதீசன், 3.50 மீற்றர் உயரத்துக்குப் பாய்ந்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளார்.

இதற்குமுன்னர் - 2002 ஆம் ஆண்டில், யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த எஸ்.ரஞ்சித்குமார், 3.31 மீற்றர் உயரத்தைப் பாய்ந்து, சாதனை நிலைநாட்டியிருந்தார்.

4x400 மீற்றர் அஞ்சலோட்ட நிகழ்வில், திருகோணமலை அணி, 3.25 நிமிடங்களில் ஓட்டத்தை நிறைவு செய்து புதிய சாதனையை நிலைநாட்டியுள்ளது.

இதற்கு முன்னர் - 1999 ஆம் ஆண்டில், அம்பாறை மாவட்ட அணி, 3.31 நிமிடங்களில ஓட்டத்தை நிறைவுசெய்து, சாதனை நிலைநாட்டியிருந்தது குறிப்பிடத்தக்கது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான படைத்தரப்பு அறிக்கை திருப்தியற்றது!

## மேலதிக விளக்கம் கோருகிறது மனித உரிமை ஆணைக்குழு

வடபகுதியிலுள்ள உயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து, மனித உரிமைகள் ஆணைக்குழு படைத்தரப்பிடம் மேலதிக விளக்கம் கோரியுள்ளது.

நாட்டில் அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டிருக்கும் நிலையிலும், உயர்பாதுகாப்பு வலயங்களைப் படையினர் தொடர்ந்தும் பேணி வருகின்றனர்.

இவ்வாறு, அரசபடைகள் உயர் பாதுகாப்பு வலயத்தைத் தொடர்ந்தும் பேணிவருவது, சட்டவிரோதமானது என்றும், இப்பாதுகாப்பு வலயம் உடனடியாக அகற்றப்படவேண்டும் என்றும் கோரி, பொதுமக்கள் பலர் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனைத் தொடர்ந்து, மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ். குடாநாட்டுக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகாவிடம்- இவ்விடயம் தொடர்பாக ஏற்கனவே விளக்கம் கோரியிருந்தது. யாழ். குடாநாட்டுக்கான இராணுவத் தளபதியால் மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு வழங்கப்பட்ட விளக்கம் திருப்திகரமானதாக இருக்கவில்லை.

இதனைத் தொடர்ந்தே, மனித உரிமை ஆணைக்குழுவின் கொழும்புத் தலைமையகம், பாதுகாப்பு அமைச்சின் கவனத்துக்கு இவ்விடயத்தை கொண்டு வந்தது.

இதன் பின்னரே - வடக்கில் இன்னமும் உயர்பாதுகாப்பு வலயம் படையினரால் பேணப்பட்டு வருவது, சட்டபூர்வமா னதா" என்பது குறித்து- படைத்தரப்பின் நியாயத்தன்மைகள் பற்றி மனித உரிமைகள் ஆணைக் குழு, படைத்தரப்பிடமிருந்து மேலதிக அறிக்கையொன்றைக் கோரியுள்ளது எனத் தெரியவருகிறது.

### தேசிய எழுச்சிப் பேரவை ஒன்றுகூடல்!

பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட அனைத்து ஊரக எழுச்சிப் பேரவை நிர்வாகக் குழு உறுப்பினர்களையும், இன்று பி.ப. 3.30 மணிக்கு சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ள ஒன்றுகூடலில் கலந்துகொள்ளுமாறு - வலிகாமம் கோட்ட அரசியற்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## காணாமற்போனோர் விசாரணை...

செம்மணிப் புதைகுழிக்கு சாட்சியாகவுள்ள கோப்ரல் ராஜபக்ஷ உட்பட பலரை இக்குழு சந்தித்துள்ளது. அத்துடன், களுத்துறைச் சிறைச்சாலையிலுள்ள கைதிகளின் பட்டியலில் காணாமல்போனோர் உள்ளனரா என விசாரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியினால் 1995 ஆம் ஆண்டிற்கு முன் காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்க நியமிக்கப்பட்ட குழு, 1995 இற்குப் பின் காணாமற்போனோர் தொடர்பாக விசாரிக்கவில்லை எனவும், ரிவிரெச இராணுவ நடவடிக்கையின் பின்னரே, கூடுதலானோர் காணாமற்போயுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

காணாமற்போன 330 பேர் தொடர்பாக மட்டுமே விசாரணை செய்யும் அதிகாரம் தமக்கு தரப்பட்டுள்ளதாகவும், ஏனையோர் குறித்து விசாரிக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவே தமக்கு அதிகாரம் தரவேண்டுமெனவும் அவர் தெரிவித்தார். 1996 ஆம் ஆண்டிலேயே கூடுதலானோர் 'காணாமற்போயுள்ளதாக விசாரணை மூலம் தெரியவந்துள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் ஆணைக்குழுவின் விசாரணை அதிகாரிகள்- கமிலஸ் பெர்னாண்டோ, எம்.சி.எம். இக்பால் ஆகியோரும் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### வட- கிழக்கு..

அமெரிக்கா, ஜப்பான் போன்ற நாடுகள் பொருளாதர நோக்கங்களை முதன்மைப்படுத்தியே இனப் பிரச்சினை விடயத்தில் தலையிடுகின்றன. தமிழ் மக்களின் பிரச்சினைகளை இந்த நாடுகள் மூன்றாம் பட்சமாகவே நோக்குகின்றன. இது தவிர்க்க முடியாததுதான் என்றும் அவர் தெரிவித்தார்.

சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு முன்னர், வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடைக்கால நிர்வாகசபை ஒன்று அமைக்கப்படுவது மிகவும் அவசியமானது. அப்போதுதான் வட - கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களை துரிதமாக மேற்கொள்ளமுடியும் என்றும் அவர் தெரிவித்தார். (200)

### வீரவணக்க...

மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, வீரவணக்கக் கூட்டத்தின் பின், தென்மராட்சி - கொடிகாமம் மாவீரர் துயிலும் இல்லத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இங்கு, இம் மாவீரரது நினைவுக்கல் திரைநீக்கம் செய்துவைக்கப்படும்.

## மாகாண தடகளப்போட்டி....

இடத்தையும் பெற்றுக்கொண்டன.

வவுனியா மாவட்டம் - 15 புள்ளிகளைப் பெற்று நான்காம் இடத்தையும், 13 புள்ளிகளைப் பெற்று- முல்லைத்தீவு மாவட்டம் ஐந்தாம் இடத்தையும், கிளிநொச்சி மாவட்டம்- 11 புள்ளிகளைப் பெற்று ஆறாம் இடத்தையும், மட்டக்களப்பு மாவட்டம் - 10 புள்ளிகளைப் பெற்று ஏழாம் இடத்தையும், மன்னார் மாவட்டம்- 7 புள்ளிகளைப் பெற்று எட்டாம் இடத்தையும் சுவீகரித்துக்கொண்டன.

போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கான பரிசளிப்பு விழா, நேற்று மாலை 5.00 மணியளவில் வடக்கு-கிழக்கு மாகாண விளையாட்டுத் துறைப் பணிப்பாளர் கே.டபிள்யூ. விமலராஜன் தலைமையில் இடம்பெற்றது.

இந்தப் பரிசளிப்பு விழாவில், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் பிரதம விருந்தினராகவும், வட-கிழக்கு மாகாண விளையாட்டுத் துறை முன்னாள் பணிப்பாளர் எஸ். மரியதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டனர்.

## இஸ்ரேலிய பாதுகாப்பு நிபுணர்கள்...

சுவி ஜோசப் செய்திருந்ததுடன் - அவரும் இந்தக் குழுவில் இடம்பெற்றிருந்தார்.

இஸ்ரேலிய பாதுகாப்பு நிபுணர்களின் விஜயத்தை ஏற்பாடு செய்திருந்த சுவி ஜோசப், கடந்த காலங்களில் இஸ்ரேலிடமிருந்து இலங்கைக்கு ஆயுதங்களைப் பெற்றுக் கொடுத்தவர். அத்துடன்- அரசியல்வாதிகள், இராஜதந்திரிகளுடன் இவர் நெருங்கிய தொடர்பு வைத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது ஏற்பாட்டில் இலங்கைக்கு வந்த இஸ்ரேலிய பாதுகாப்பு நிபுணர் குழுவில் இடம்பெற்ற ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் ஜோசி பென் ஹனான் (yossi Ben Hanan)- இஸ்ரேலின் அனைத்து வகையான இராணுவத் தளபாடங்கள் மற்றும் தொழில்நுட்பங்களுக்கான அனுமதியை வழங்கும் சிபாற் (SIBAT) என்ற அமைப்பின் தலைவராக இருந்து வருகின்றார். இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் சிபாற் அமைப்பு - வெளிநாடுகளுக்கு பாதுகாப்பு உதவிகள் மற்றும் இஸ்ரேலிய தொழில்நுட்ப உதவிகளை வழங்குவது தொடர்பாக முக்கிய முடிவுகள் எடுப்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிபுணர் குழுவில் இடம்பெற்றிருந்த ஜேகியல் ஹாரல் (yehial Harel) - இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் தலைமை பாதுகாப்பு அலுவலராவார். இஸ்ரேலிலுள்ள இராணுவ, அரசியல் மையங்களைப் பாதுகாப்பதற்கான அமைப்பின் தலைவராக இருக்கும் இவர், இஸ்ரேலிலுள்ள வலிமையான அதிகாரம் கொண்ட உயர் அதிகாரிகளில் முக்கியமானவர்.

இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சின் கீழுள்ள முக்கிய இராணுவ மையங்கள் மற்றும் அணுசக்தி உற்பத்தி மையங்களுக்கும் இவரே பொறுப்பாக இருந்துவருகிறார்.

மேலும், இக்குழுவில் இடம்பெற்ற கேணல் யெகுடா சொஷானி (Yehuda shoshani) தாய்லாந்திலுள்ள இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சுக் கிளையில் பணியாற்றி வருகின்றார். இலங்கையுடனான பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக இணைப்பு வேலைகளை இவரே மேற்கொண்டு வருபவராவார்.

அத்துடன், கேணல் யொவாஷ் ரபீன் (Yoash Rubin) என்ற இராணுவ அதிகாரியும் இக்குழுவில் இடம்பெற்றிருக்கிறார். இவர், சிபாற் அமைப்பின், இலங்கையை உள்ளடக்கும் பிராந்தியத்துக்கான தலைவரா[illegible] இருப்பது குறிப்பிடத்தக்கது.

இவர்களுடன் ஸ்ரவ் மோஸே (Stav Moshe) என்ற பிரபல இஸ்ரேலிய வர்த்தகப் பிரமுகரும் கொழும்புக்கு வந்திருந்தார். இவர், Hornet என்ற நிறுவனத்தின் தலைவராவார். சிங்கப்பூரைத் தளமாக கொண்டியங்கும் பிரபல இராணுவத் தளபாட விற்பனை முகவரான சுவி யோசப், இவரது வர்த்தகப் பங்காளியாவார்.

இவர்கள் இருவரும் இணைந்தே அண்மையில், 40 மில்லியன் டொலர் பெறுமதியான கிபிர் ஜெட் விமானங்கள் மற்றும் கடற்படை ரோந்துப் படகுகளை இஸ்ரேலிடமிருந்து, அரச படைகளுக்குப் பெற்றுக் கொடுத்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பு வந்திருந்த இந்த நிபுணர் குழுவினர், உயர்மட்ட இராணுவ அதிகாரிகள் மற்றும் அரசியல் பிரமுகர்களைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தியதாகவும் தெரியவருகிறது. (க,லி.ச)

## கரும்புலிகள் தாக்குதல் பற்றி...

வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர்- இவ்வாறான உள்ளூர் புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களுக்கான மாநாட்டில் கலந்துகொண்டிருப்பது, பாதுகாப்பு ஆய்வாளர்களிடையே பெரும் வியப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

நாட்டின் பாதுகாப்புப் பற்றி மிக முக்கியமான தகவல்களைப் பரிமாறிக்கொள்ளும் புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களுக்கான மாநாட்டில், இவ்வாறு வெளிநாட்டைச் சேர்ந்த ஒருவர் பங்குபற்றியிருப்பது பல்வேறு கேள்விகளையும் எழுப்பியிருப்பதாகவும், பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்திருக்கின்றனர்.

இது தொடர்பாக உள்ளகப் புலனாய்வுப் பணியகத்தின் (Directorate of Internal Intelligence) வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில், இலங்கையின் புலனாய்வுச் சேவை வரலாற்றில், முதற்தடவையாக ஒரு வெளிநாட்டவர் - மிக முக்கியமான, அந்தரங்கமான மாநாட்டில் பங்கேற்றியிருப்பது தமக்கும் அதிர்ச்சியைத் தந்திருப்பதாகக் கூறியுள்ளன.

வெளிநாட்டவர் ஒருவரின் பங்கேற்பு, நாட்டின் புலனாய்வுச் சேவைகளின் முக்கியத்துவத்தில் பாரியதொரு அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருப்பதாகவும், உள்ளகப் புலனாய்வுச் சேவைகளின் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

இந்த மாநாட்டில் கலந்துகொண்ட அமெரிக்க உயரதிகாரி, நேரடியாகவே புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களிடம் - சில முக்கியமான வினாக்களை எழுப்பியதாகவும் தெரியவருகிறது. இந்தக் கேள்விகளில் - விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் படையணி பற்றியும், விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு இலக்காகக் கூடிய இராணுவ மையங்கள் பற்றியும் அவர் கேள்விகளை எழுப்பியதாகவும், அந்த மாநாட்டில் பங்குபற்றிய புலனாய்வு உயரதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு, அமெரிக்கர் ஒருவர் மிக முக்கியமான பாதுகாப்பு மாநாட்டில் பங்கேற்றது பற்றி, பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் அறிந்துகொண்டிருக்கவில்லை எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்காவைச் சேர்ந்த அதிகாரியொருவர்- இவ்வாறான முக்கிய மாநாடொன்றில் பங்குபற்றுவது பற்றி அறிந்திருக்கவில்லை என, வொஷிங்ரனிலுள்ள இலங்கைத் தூதரக அதிகாரிகளும் கூறியிருக்கின்றனர்.

மேலும், இந்த மாநாடு பற்றிக் கருத்துத் தெரிவித்த புலனாய்வுச் சேவைகளின் நடவடிக்கைகளைக் கவனிக்கும் ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ்மா அதிபரான மெரில் குணரட்ண-

அமெரிக்காவுடன் இலங்கை அரசாங்கம் செய்துகொண்டுள்ள புலனாய்வுப் பணிகளுக்கான ஒத்துழைப்பு மற்றும் பயிற்சி வழங்குவது மான உடன்பாட்டின் அடிப்படையில் தான் குறிப்பிட்ட அமெரிக்க உயரதிகாரி மாநாட்டில் பங்குபற்றியதாகவும், இது பற்றி மேலதிக விபரங்களைத் தெரிவிக்க முடியாதெனவும் கூறியிருக்கிறார்.


## எட்டாம் ஆண்டில் நீங்காத நினைவுடன்

தாயின் மடியில்
27 - 05 - 1978




தாயக மண்ணில்
14 - 07 - 1995

### வீரவேங்கை மன்னன்

(லோகநாதன் கோகுலன்/கவாஸ்கர்)

(பரியோவான் கல்லூரி முன்னாள் உயர்தர வகுப்பு மாணவன்)

உயர்ந்தவனாய் உனை வளர்க்க
நினைத்திருந்தோம் நடக்கவில்லை
உன் நிழலில் இளைப்பாற
நினைத்திருந்தோம் முடியவில்லை
பிரியமானவனே உன் பிரிவால்
மூண்ட துயர் தீரவில்லை
வாழும்வரை வேதனை தான்
மனம் ஆறிட ஒரு வழியுமில்லை

உன் நினைவுடன்,
அப்பா, அம்மா, அக்காமார்,
அத்தான்மார், உறவுகள்.

*கச்சேரி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*

## இரவுக் கடமை உத்தியோகத்தர் தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும் 40 வயதிற்குட்பட்ட க.பொ.த உயர்தர சித்திபெற்ற சொந்த மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர் (பத்திரிகைத்துறையில் முன் அனுபவம் விரும்பத்துக்கது) சகல ஆவணங்களுடன் 14.07.2003 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

நிர்வாக இயக்குநர்,
நமது ஈழநாடு.

## புதிய பிரிவுகள் 2005, 2004

Geo - K.கிரிதரன்
Log - P.கமல்
Po.Sc. - T.திருமுருகன்
Hi.C. - க.சத்தியதாசன்
Tam. - க.தர்மராசா

ஆரம்பம் இன்று மாலை 4 மணி
(பழைய நேரம்)

திகழ் கல்வி நிலையம்
K.K.S. வீதி, இணுவில். (418)


## மரண அறிவித்தல்

### வைத்திலிங்கம் இராமலிங்கம்

*(முன்னாள் C.T.B. ஊழியர்)*

மாதகலைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் இராமலிங்கம் அவர்கள் 12.07.2003 அன்று காலமானார்.

இவர், காலஞ்சென்ற தங்கமணியின் அன்புக் கணவரும், கெங்காதரன், பிருந்தா, ஆகியோரின் பாசமிகு தந்தையும் பாலச்சந்திரனின் மாமனாரும், தனுராஜின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள், இன்று (14.07.2003) இவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மாதகல் போதி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*அந்தோனியார் கோவில் வீதி,*
*மாதகல்.*

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 14.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.